Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 5 ஆம் நாள் (22.10.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 22

THAMPI links with LIONAIR

கொழும்பா? யாழ்ப்பாணமா?

50 நிமிடங்களில் பயணம்...

பயணக்கட்டணம் ரூபா 1,999/- மட்டுமே

கொழும்பில் 075-0355322 யாழ்.நகரில் 021-2222504

Hotline - 0777-382343, 072-401423

## அமெரிக்க ராணுவ அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சில் மாநாடு

### இவ்வாரம் நடக்கிறது

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்பு கட்டமைப்புக்கு அமெரிக்க அரசின் உதவித்திட்டத்தின் கீழ் இவ்வாரம் பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்புத் தொடாபான உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. அமெரிக்காவிலிருந்து இம் மாநாட்டிற்காகக் குழுவொன்று வருகிறது. ஐந்து நாள் நடைபெறும் இம மாநாட்டில் பாதுகாப்புத் திட்டமிடல் தொடர்பாகவும் அதோடு இணைந்த புதிய திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இலங்கையின் உயர் இராணுவ மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் இம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினருக்குத் துப்பாக்கி வைத்திருக்க அனுமதியளித்தது யார்?

### ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நீதிவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள புளொட் இயக்க உறுப்பினர்கள் ஆயுதம் வைத்திருப்பதற்கு அனுமதி வழங்கியது யார் என்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்கினராஜா பொலிஸாருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வீரசிங்கம் மண்டபத்துக்குள் கைத்துப்பாக்கியுடன் நுழைய முற்பட்ட புளொட் இயக்க உறுப்பினர் மடக்கிப்பிடிக்கப்பட்டு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாகப் பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தார்.

நேற்று மாலை இவர் யாழ்.நீதிமன்

(10ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் உயர் தலைவர்களுடன் நோர்வே குழு இரு கட்டப் பேச்சு!

## பிரபாவையும் சந்திக்கலாம் என எதிர்பார்ப்பு

(கிளிநொச்சி)

**இன்று வடபகுதி வரும் நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் குழுவினர் வன்னி சென்று புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உட்பட உயர்மட்டத் தலைவர்களுடன் இரண்டு கட்டப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர். இப்பேச்சுக்களில் பல தரப்பட்ட விடயங்கள் ஆராயப்படவுள்ளன.**

இன்று யாழ்ப்பாணம் வரும் நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான அறுவர் கொண்ட குழு மதியமளவிலேயே வன்னி புறப்பட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுடனான இவர்களின் சந்திப்பு இன்று மாலையும் நாளை காலையுமாக இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது. புலிகளின் தலைவர் பிரபாகரனை இக்குழுவினர் சந்திப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பேச்சுக்களின்போது வடக்கு-கிழக்கு அபிவிருத்தி, உயர் பாதுகாப்பு வலயங்கள், இரண்டாம் கட்ட

(10ஆம் பக்கம் பார்க்க)

## தங்கத்துரை கொலை வழக்கு தள்ளுபடி சந்தேகநபர்கள் அனைவரும் விடுதலை

(நமது திருமலை, கொழும்பு நிருபர்கள்)

முன்னாள் திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அ.தங்கத்துரை கொலையான குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேகநபர்கள் அனைவரும் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டதுடன் வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

1997ஆம் ஆண்டு யூலை மாதம் 5ஆம் திகதி திருமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற புதிய கட்டடத் திறப்பு விழாவுக்குச் சென்ற சமயம் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் அப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே குழு - பிரதமர் சந்திப்பு இரவு முழுவதும் தொடர்ந்தது!

(கொழும்பு நிருபர்)

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழுவினர் நேற்றிரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேசினர்.

நேற்றிரவு ஒன்பது மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு இரவுப் போசனத்துடன் நள்ளிரவுக்கு அண்மை வரை தொடர்ந்தது.

இச்சந்திப்பில்- வடக்கு, கிழக்கு அபிவிருத்தியைத் துரிதப்படுத்துதல், அபிவிருத்திக்கான கால எல்லைகளை வகுத்தல், விடுதலைப் புலிகளுடனான செயலணிக்குழு அமைத்தல், அதியுயர் பாதுகாப்பு

(10ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ராணுவத் தளபதி? ஜனாதிபதி நிராகரிப்பு!

அடுத்த் இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லோஹான் குணவர்த்தனாவை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

தற்போது தளபதியாக இருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் பலகல்லவுக்கு பதவி உயர்வு கொடுத்து, அவரின் இடத்திற்கே இவரை நியமிக்க எண்ணியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால்- ஜனாதிபதி இந்நியமனத்தை விரும்பவில்லை என்றும் ராணுவத்தில் அநேகரும் இதனை விரும்பவில்லை என்றும், தற்போதைய ராணுவத் தளபதியே தொடர்ந்

(10ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சித் தலைவரையும் நோர்வேக் குழு சந்தித்தது

(கொழும்பு நிருபர்)

நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசன் தலைமையிலான குழுவினர் நேற்று எதிர்க்கட்சித தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்தனர். இச்சந்திப்பின் போது தாய்லாந்தில் முதல் கட்ட பேச்சுவார்த்தையில் காணப்பட்ட உடன்பாடுகளை பற்றி நோர்வேக் குழுவினர் எதிர்க்கட்சித் தலைவருக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சமூகத்தின் பாதுகாப்பற்ற நிலைமையை விடுதலைப் புலிகள் அனுமதிக்க மாட்டார்கள்!

### நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா உறுதிபடத் தெரிவிப்பு



எமது போராட்டத்தின்போது பல கரடுமுரடான பாதைகளைக் கடந்து வந்திருக்கும் நாம் எமது போராட்ட இலக்கை நிச்சயம் அடைவோம் என நேற்றைய 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' நிகழ்வின் இறுதியில் சிறப்புரையாற்றிய தமிழீழ நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- எமது தேசியத் தலைவர் சொல்வதைவிட செயலில்தான் நிகழ்த்திக் காட்டுவார். இன்று சர்வதேசத்தில் தமிழ்த் தேசியத்தின் தலைவராக எமது தலைவர் வே.பிரபாகரன் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார்.

நாம் சிங்கள மக்களையோ அல்லது சிங்கள தேசத்தையோ ஆக்கிரமிக்கப் போராடவில்லை. நாம் எமது மக்களை, எமது தேசத்தை மீட்கவே போராடுகின்றோம். எமக்கு எமது தேசத்தைவிட வேறு எதுவும் தேவையில்லை. நாம் 1948இல் இழந்த எமது உரிமையை நிலைநாட்டவே போராடுகின்றோம்.

நாம் சமாதானத்திற்காக எவ்வளவோ தியாகங்களை, விட்டுக்கொடுப்புக்களைச் செய்துள்ளோம் ஆனால எமது உரிமை ஒன்றையேனும் நாம் விட்டுக் கொடுக்கமாட்டோம்.

நாம் 1996ஆம் ஆண்டிற்கு முன் இங்கு எப்படி எமது நீதி, நிர்வாகங்

(10ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் நிலைமைகளை நேரில் அறிய பிரிட்டன் தூதரகக் குழு


(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலை குறித்து அறிந்து கொள்வதற்கு பிரிட்டன் அரசு ஆர்வம் செலுத்தி வருகிறது. யாழ்.குடாநாடு தொடர்பாக உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவதற்காக பிரிட்டன் தூதரக அதிகாரிகள் இருவர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

மேற்படி இரு அதிகாரிகளும் கொழும்பில் அமைந்துள்ள பிரிட்டன் உயர் ஸ்தானிகராலயத்திலிருந்து நேற்றைய தினம் யாழ். வந்தனர். காமிலா சுக்டெம், அடம் பேர்க் ஆகிய இருவரும் நேற்று மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கத்தை சந்தித்து உரையாடினர். அவர் யாழ்.

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அப்ப... எங்கட ரோமியோக்கள் பாடு திண்டாட்டந்தான்.

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் முத்துச் சிதறல், குறைதீர் மன்றம்

# ஐ.நா.அமைதிப்படைக்கு ராணுவத்தினர்; படையதிகாரிகள் மத்தியில் அதிருப்தி!

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த படையினரை ஐக்கிய நாடுகள் சமாதானப் படைக்கு அனுப்புவது தொடர்பாக அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து உயர்மட்டப் படையதிகாரிகள் சிலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த படையினரை ஐ.நா.சமாதானப் படையில் சேவையாற்ற அனுப்புவது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக ஆலோசனைகளைப் பெற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க- பிரித்தானியாவின் ஒய்வு பெற்ற இராணுவ அதிகாரியான ஜெனரல் சேர்.மைக்கல் றோஸை இலங்கைக்கு அழைத்துள்ளார்.

இவர் வியாழன்று கொழும்புக்கு வந்து ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசுவார். இதன்போது ஐ.நா.அமைதிப்படையில் பணியாற்றுவதற்காக சிறிலங்காப் படையினர் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைத் தகைமைகள், பயிற்சிகள் மற்றும் சேவைத் தரம் என்பன குறித்த அறிக்கைகளைக் கையளிப்பார்.

ஐ.நா. சமாதானப் படையில் சேவையாற்றுவதற்கு சிறிலங்காப் படையினரை அனுப்புவதன் மூலம் தற்போது பெருமளவிலான நிதித் தேவையைக் கொண்டிருக்கும் இராணுவத்திற்கு பொருளாதார ரீதியான உதவியாகவும் அமையும் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஆனால் உயர் படையதிகாரிகள் சிலர் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து அளவிற்கு அதிகமான நம்பிக்கையுடன் அரசாங்கம் இருந்து கொண்டு படையினரை ஐ.நா. சமாதானப்படையில் இணைக்க முயற்சிக்கிறது.

உறுதியானதொரு சமாதானம் ஏற்படும் வரை படையினரை வெளிநாடுகளுக்கு அனுப்புவது தவறானது. இத்தகைய செயல்கள் குறுகிய நோக்கமுடையவை எனவும் அவ்வதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தெற்காசியாவில் தற்போது இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகள் மட்டுமே ஐ.நா. அமைதிப்படைக்கு படையினரை அனுப்பி வருகின்றன. சிறிலங்காவும் இதில் இணைந்து கொண்டால் தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான போட்டிகள் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கிழக்குத் தீமோரில் மட்டுப்படுத்தபட்ட அளவான சிறிலங்காப் பொலிஸார் அமைதி காப்புப் பணியில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

## யாழ்.நகரில் தீபாவளிவிற்பனை அமோகம்

தீபாவளி தினத்தை முன்னிட்டு - யாழ்.நகர் சனக்கூட்டத்தால் நிரம்பி வழிகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் இவ் வருடம் தென்னிலங்கைப் பகுதி வர்த்தகர்களும் இங்கு வந்து பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (96)

## மாவீரர் மயானம் புனரமைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கஞ்சிக்குடிச்சாறு மாவீரர் மயானம் அப்பகுதி மக்களினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. எதிர்வரும் மாவீரர் தினத்தை முன்னிட்டே இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## இராணுவத்தின் வாகன திருத்தகத்தில் 1 கோடி 60 இலட்சம் ரூபா மோசடி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் வாகனம் திருத்தும் நிலையத்தில் 2001-2002 காலப்பகுதியில் ஒரு கோடி 60 இலட்ச ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொம்பனித் தெருவில் இயங்கும் வாகன திருத்த நிலையத்தில் இம் மோசடி இடம்பெற்றுள்ளது. புதிய உதிரிப்பாகங்கள் கொள்முதல் செய்யப்பட்ட வேளையிலே இம்மோசடி நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அம்பாறையில் விசேட அதிரடிப்படை முகாம்களை அகற்றுவதற்கு எதிராக மு.கா. உண்ணாவிரதம்

### நாடாளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் அறிவிப்பு

(அம்பாறையிலிருந்து சசி)

அம்பாறை மாவட்டத்திலிருந்து விசேட அதிரடிப்படை முகாம்கள் அகற்றப்படுவதனைக் கண்டித்து முஸ்லிம் காங்கிரஸின் நான்கு எம்.பிக்கள் அம்பாறையில் உண்ணாவிரதம் இருந்து தமது எதிர்ப்பினை தெரிவிக்கப் போவதாக திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் தெரிவித்தார்.

விசேட அதிரடிப்படை முகாம்கள் அகற்றப்படுவது - முஸ்லிம்களுக்குப் பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதனை அரசாங்கத்திற்கு சுட்டிக் காட்டவே உண்ணாவிரதம் இருக்கப் போவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த தீர்மானம் பற்றி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கிமுக்கும் தெரியப்படுத்தியுள்ளதாக அன்வர் இஸ்மாயில் குறிப்பிட்டார்.

அதிரடிப்படைகள் அகற்றப்படுவது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவுடனும் உள்துறை அமைச்சருடனும் தமிழ்க் கூட்டமைப்பு இணக்கம் கண்டதனால் தாம் விரக்தியும் பீதியும் அடைந்துள்ளதாகவும் தெரிவித்த அவர்,

முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு அதிரடிப்படையினரே தேவை என மேலும் தெரிவித்தார்.

## புதிய முகாம் அமைப்பு

புத்தூர் ஊடாக சாவகச்சேரிக்கு செல்லும் அந்திரானை என்னும் பகுதியில் புதிய இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. (110)

## நொச்சிக்குளம் உடைப்பெடுப்பு பல குடிமனைகள் வெள்ளத்தில்

(வவுனியா)

வவுனியா மாவட்டம் பாலமோட்டை கிராம அலுவலர் பிரிவில் உள்ள நொச்சிக்குளம் உடைப்பெடுத்துள்ளதால் அப்பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

நொச்சிக்குளம் அணைக்கட்டில் 100 அடி நீளத்துக்கு உடைப்பு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் இப்பகுதியில் பெரும் வெள்ளம் ஏற்பட்டு 70 ஏக்கர் விளை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

சுமார் 70 குடும்பங்கள் இந்த வெள்ளத்தால் இடம் பெயர்ந்துள்ளதாகவும் இவர்களது வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## வீதி விபத்து ஏற்படும் அபாயம்

பருத்தித்துறை, பிரதான வீதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதனால் வீதி விபத்துக்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை இறங்குதுறையில் பொருட்களை ஏற்றி இறக்க வரும் பாரவூர்திகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையாலும் பொருட்கள் ஏற்றப்பட்ட பாரவூர்திகள் பொருட்களை களஞ்சியப்படுத்த புலோலியில் அமைந்துள்ள களஞ்சியத்திற்கு வருவதாலும் இந்த பாரவூர்திகள் மந்திகை கந்த முருகேசனார் சிலையடியிலிருந்து 1 ஆம் கட்டை சந்தி வரையான பிரதான வீதியின் ஓரங்களில் நிறுத்தப்படுகின்றன. இதனால் பாடசாலை நேரங்களிலும் விபத்துக்கள் நடைபெறக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகரிப்பதாகவும் பொது மக்கள் தெரிவிக்கப்படுகின்றனர். (15)







நேற்றைய தமிழ் கூடல் நிகழ்வில் கலந்து கொண்டோரையும், அங்கு மேடையேறிய 'கண்ணகி வழக்குரைத்தல்' நாடகத்திலிருந்து சில காட்சிகளையும் படங்களில் காணலாம். (படங்கள் - விதுர்சுஷன்)

## இன்றைய நாள் இனிய நாள்

### 22.10.2002 - செவ்வாய்க்கிழமை

**மேடம்** :- தேகசுகம் மத்திமம், பணவரவு மத்திமம், தெய்வ தரிசனம் பலன், உறவினர் வருகை, கல்வியில் ஊக்கம் தேவை, தொழில் முன்னேற்றம், வியாபாரம் மத்திமம்.

**இடபம்** :- தேகசுகக்குறைவு, பண வரவு குறைவு, தேவையற்ற செலவு, மனஸ்தாபம், கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியாபாரம் மத்திமம்.

**மிதுனம்** :- தேகசுகம் நன்று, பண வரவு நன்று, மனமகிழ்ச்சி, விதம் விதமான உடைகள் அணிவதில் மகிழ்ச்சி, சமய அறிஞர் தரிசனம், கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, பொதுசேவையில் பங்கு, வெளியூர் பயணம், கல்வி முன்னேற்றம், தொழில் மத்திம நிலை, வியாபாரம் முன்னேற்றம்.

**சிங்கம்** :- தேகசுகக்குறைவு, பண வரவு குறைவு, வைத்தியச் செலவு, எதிரிகளால் தொல்லை, கல்வி முன்னேற்றம், தொழில் மத்திமநிலை, வியாபாரம் முன்னேற்றம்.

**கன்னி** :- தேகசுகக்குறைவு, பண வரவு நன்று, தேவையற்ற பகை, புதிய காரியம் தொடங்குவது நன்றல்ல, கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்** :- தேகசுகம் நன்று, பண வரவு நன்று, மனைவி மகிழ்ச்சி, நண்பர்கள் சேர்க்கை, பெண் விதம் விதமான ஆடை அணிவதில் மகிழ்ச்சி, கல்வி மத்திம நிலை, தொழில் முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, எடுத்த காரியம் வெற்றி, தெய்வதரிசனம், கடன்வருகை, கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியாபாரம் மத்திம நிலை.

**தனு** :- தேகசுகக்குறைவு, பண வரவு நன்று, பொதுசேவையில் மதிப்புக்குறைவு, புத்திரர் தேகசுகக் குறைவு, கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- தேகசுகம் சமநிலை, பணவரவு குறைவு, மாதா சுகயீனம், வாகனச்செலவு, கல்வி முன்னேற்றம், தொழில் மந்தநிலை, வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- தேகசுகம் நன்று, பண வரவு நன்று, எடுத்தகாரியம் வெற்றி, சகோதரர் வருகை, கல்வி சம நிலை, தொழில் மத்திமநிலை, வியாபாரம் முன்னேற்றம்.

**மீனம்** :- தேகசுகம் நன்று, பணவரவுக் குறைவு, வரவுக்கு மிஞ்சிய செலவு, வாக்குவர்தம், கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம்.


## சிறு விளம்பரம்

### வித்தும் விழுதும்
### தமிழினம் அன்று முதல் இன்று வரை

இந்த இனத்தின் மேம்பாட்டுக்கு இடையூறாக இருப்பவை யாவை? இன நலனில் நாட்டமுள்ளோருக்கு நல் விருந்து.

யாழ்.நகர் மண்டேலாவிலும், சாவகச்சேரி பொதிகை புத்தக நிலையத்திலும் கிடைக்கும். (017)

### வாடகைக்கு

இல.172(254) கே.கே.எஸ் வீதியிலுள்ள மாடிக்கடை வாடகைக்கு விடப்படும் தொடர்புகளுக்கு அ.அலக்ஸிஸ், ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் சமாதான நீதவான் இல.18, புதுமை மாதா கோவில் கிழக்கு வீதி, யாழ்ப்பாணம்
T.P 021-2223358 (015)

# தேர்தலுக்குத் தயாராகிறது ஐ.தே.க.!

# மாவட்ட ரீதியாக விசேட ஊடகப் பிரிவு!!

## வெளிநாடு சென்ற அமைச்சர்கள், எம்.பிக்கள் நாட்டுக்கு அழைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகும்படி ஐ.தே.க தனது கட்சிக் கிளைகளுக்கும், அமைப்பாளர்களுக்கும் அறிவித்திருப்தாகத் தெரியவருகின்றது.


ரணில்

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கான முக்கிய நடவடிக்கையாக விசேட ஊடகப் பிரிவுகள் மாவட்ட ரீதியாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில் இந்த அவசரச் செயற்பாடுளை ஐ.தே.க. ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, தேர்தலை எதிர்கொள்வது தொடர்பான இரகசியக் கூட்டங்களையும் ஐ.தே.க நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள அமைச்சர்களை உடனடியாக நாடு திரும்புமாறு அரசாங்கம் கேட்டுள்ளது.


ரவி கருணாநாயக்க

தற்போது அமைச்சர்கள் கரு ஜெயசூரிய, ரவி கருணாநாயக்க ஆகியோர் வெளிநாடுகளில் தங்கியுள்ளனர். மேலும் பல ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளனர். இவர்களை உடனடியாக நாடு திரும்பி தொகுதிகளின் கட்சிக் கிளைகளைப் புனரமைத்து இயக்குமாறு கோரப்பட்டுள்ளது.

19வது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்தே அரசாங்கம் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் புதிய தேர்தல் நடத்த முயற்சி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.


கரு ஜெயசூரிய

## மிதிவெடியில் பசுமாடு சிக்கியது!

(சாவகச்சேரி)

மிதிவெடியில் சிக்கி பசுமாடு ஒன்று காலை இழந்த சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் அரியாலைப் பகுதியில் இடம்பெற்றது.

கண்டி வீதிக்கு அருகாமையில் முன்பிருந்த காவலரண் பகுதிக்கு அண்மையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது. பாதம் சிதைவடைந்து தொங்கிய நிலையில் காணப்பட்ட அப்பசுவினை மக்கள் அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தினர்.

## கல்வியியல் கல்லூரி பரீட்சை

(புன்னாலைக்கட்டுவன்)

தேசிய கல்வியியற் கல்லாரிகளில் கல்வி பயில்கின்ற இரண்டாம் வருட ஆசிரியப் பயிலுனர்களுக்கான இறுதி எழுத்துப் பரீட்சை நவம்பர் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

அத்துடன் இவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### மணற்காட்டுப் பகுதியில்

## சட்டவிரோதமாக வெட்டிய சவுக்கு மரங்கள் சிக்கின!

வடமராட்சி கிழக்கில் உள்ள மணற்காட்டில் இரவு நேரத்தில் சவுக்கு மரம் வெட்டுகிறார்கள் என்ற தகவலை அறிந்து புலிகளின் வடமராட்சி அரசியல்துறையினர் அங்கு சென்றபோது 2 லோட் சவுக்கு மரங்கள் உழவு இயந்திரங்களில் ஏற்றப்பட்டிருந்ததைக் கண்டனர்.

மரம் வெட்டியவர்களை பிடிப்பதற்கு ஆயத்தங்கள் செய்தபோது அவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (17)

## பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கம்; சட்டமா அதிபருடன் கூட்டமைப்பு சந்திப்பு!

(கொழும்பு நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த வாரம் சட்டமா அதிபர் கமலசபேசனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரியவருகின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள குழுவின் செயற்பாடுகள் குறித்து ஆராயவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பாக ஆராய்வதற்கு அரசாங்கத்தால் - உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குழு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பாக என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதைச் சட்டமா அதிபரிடம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டறிந்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்பாணத்தில் பொறியியல் பீடம்; பல்கலை. குழு தென்பகுதி விஜயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமையக்கூடிய பொறியியற்பீடம் - எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றி ஆராய்ந்து பூரணமான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும் பொருட்டு - யாழ். பல்கலைக்கழக உயர்மட்டக் குழுவொன்று நேற்று மொறட்டுவ, றுகுண, பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற்பீடங்களிற்கு சென்றுள்ளது.

யாழ்.பொறியியற்பீடம் பற்றிய பூரணத்துவமான அறிக்கையொன்றை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கோரியிருந்தது. அதற்கமைவாக பல்கலைக்கழக மூதவை உயர்மட்டக்குழுவொன்றை அமைத்திருந்தது.

அதற்கமைவாக நேற்றைய தினம் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையில் சென்றுள்ள குழுவில் - பௌதீகவியல் துறைத்தலைவர் பேராசிரியர் கந்தசாமி, கணினித் துறைத் தலைவர் மகேசன், விவசாய பொறியியற் துறைத் தலைவர் விஜயரத்தினம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களது விஜயங்களுக்கான ஏற்பாடுகளையும் உதவிகளையும் அவ்வப் பல்கலைக்கழக உபவேந்தர்களும், பொறியியற் பீடாதிபதிகளும் செய்துள்ளனர். இவர்களது விஜயத்தின் முடிவில் துணைவேந்தரிடம் இது தொடர்பான அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## சாவகச்சேரி பிரதேச சபையால் கடைகள் அமைப்பு

வரணிச் சந்தையில் சாவகச்சேரி பிரதேச சபையினால் இரு கடைகள் கட்டப்பட்டு கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையை அடைந்துள்ளன. விரைவில் இக்கடைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும் என சாவகச்சேரிப் பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (28)

## கணவன் மனைவி சச்சரவில் குண்டுத் தாக்குதல்; ஒருவர் பலி!

### கண்டி மாரவிலவில் சம்பவம்

(கண்டி)

கண்டி மாவட்டம் மாரவில என்னுமிடத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் பெண் ஒருவர் கொல்லப்பட்டார். கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் இடம்பெற்ற வாக்குவாதமே இக்குண்டுவெடிப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. கணவன் குண்டை வெடிக்க வைத்து மனைவியைக் கொன்றதாக கூறிப் பொலிசார் அவரைக் கைதுசெய்துள்ளனர்.

முன்னதாக மின்னல் தாக்கியே மனைவி உயிரிழந்ததாக கணவன் பொலிசில் முறைப்பாடு செய்திருந்தார். பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் குண்டுவெடிப்பிலேயே மரணம் சம்பவித்துள்ளதாக கண்டறிந்திருந்தனர்.

இதையடுத்து கணவனைக் கைதுசெய்த பொலிசார் அவருக்கு எவ்வாறு குண்டு கிடைத்தது என்பது குறித்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## காஞ்சிரங்குடா படுகொலை விசாரணைகள் திருக்கோவிலில் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டம் காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமின முன்பாக இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட மூன்று உறுப்பினர் விசாரணைக்குழு நேற்றுமுதல் செயற்படத்தொடங்கியுள்ளது.

ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக தலைமையிலான இந்தக் குழுவில், ஓய்வுபெற்ற நீதிபதி ஒலிவர் வீரசேன, சாமித்தம்பி விவேகானந்தன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

நேற்றுக் காலைமுதல் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் விசாரணைக்குழுவின் அமர்வுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த விசாரணைக்குழு 24 ஆம் திகதி வரை இங்கு சாட்சியங்களைப்பதிவு செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் 25ஆம், 26ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் 2/13 ஆம் இலக்க அறையிலும் இக்குழு சாட்சியங்களைப் பதிவு செய்யும்.

இந்த ஆணைக்குழுவின் அறிக்கை 30 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## குருநகரில் சேதமுற்ற வடிகால்கள் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் புகார்

குருநகர் மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள வடிகால்கள் சேதமடைந்துள்ளன. இதனால் கழிவுநீர் தங்கி நின்று துர்நாற்றத்தை ஏற்படுத்துவதாக அங்குள்ள மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

இவ்வடிகால்கள் வீடுகளுக்கூடாகச் செல்வதனால் பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாநகரசபையினர் இவற்றைப் புனரமைப்புச் செய்யாது பாராமுகமாக இருக்கின்றனர் என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.(106)

### மீனவர்களுக்கு இடையூறாக இருக்கும்

## முருகைக் கற்களை அகற்றுவதற்கு உதவுவதாக கஜேந்திரகுமார் உறுதி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் அண்மையில் வடமராட்சிப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டார்.

இவர் அங்குள்ள மீனவர்களின் குறைகளைக் கேட்டறிந்ததோடு, அவர்கள் கடலுக்குச் செல்வதற்கு இடைஞ்சலாக கரையில் இருக்கும் முருகைக்கற்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்து தருவதாகவும் உறுதியளித்தார். (15)

## போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக யு.என்.எச்.சி.ஆர். புனர்வாழ்வுத் திட்டம்

### 10லட்சத்து 28 ஆயிரம் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு

(கொழும்பு)

அகதிகளுக்கான ஐ.நா.தூதுவராலயம் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலனுக்காக 15 மாதகால புனர்வாழ்வுத் திட்டமொன்றைச் செயற்படுத்த ஆரம்பித்துள்ளது.

ஒக்டோபர் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் அடுத்த வருடம் டிசம்பர் 31ஆம் திகதி வரை செயற்படுத்தப்படும் எனத் தெரியவருகின்றது. பத்து இலட்சத்து 28 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் அறுபதாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 40 ஆயிரம் தனி நபர்கள் நன்மை பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புரிந்துணர்வு உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் துரிதமடைந்துள்ளதையடுத்து அகதிகளுக்கான ஐ.நா. தூதுவராலயம் மேற்படி புனர்வாழ்வுத் திட்டத்தை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அணுவாயுதம் தொடர்பாக அமெரிக்காவுடன் பகைமையைக் கைவிட வடகொரியா முடிவு!

உலகவலம்

(பியாங்யங்)

அணுவாயுதத் திட்டம் தொடர்பாக வொஷிங்டனுடன் தனது பிரச்சினையைப் பேச்சுவார்த்தைகள் மூலம் சுமுகமாகத் தீர்க்க வடகொரிய அரசாங்கம் விரும்புவதாக தலைநகர் பியாங்யங் ஊடாக தென்கொரியாவுக்கு வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய அமெரிக்கா, வடகொரியா மீதான பகைமை உணர்வை மறக்க முன்வருமானால் வடகொரியாவும் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முன்வருமென பியாங்யங் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடகொரியா 1994இல் ஐக்கிய அமெரிக்காவுடனான உடன்படிக்கைக்கு மாறாக இரகசிய அணுவாயுதத் திட்டத்தினை வைத்திருப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. இது தொடர்பான எந்தவித மறுப்பினையும் வடகொரியாவின் தரப்பிலிருந்து இதுவரை விடுவிக்கப்படவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் கொலின் பவல் கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்காவுடனான ஒப்பந்தம் மீறப்பட்ட நிலையில் 1994ஆம மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் - எரிபொருள் மற்றும் எரிசக்தி நிலைய கட்டடங்கள் நிர்மாணத்திற்கு அளிக்கப்படும் அமெரிக்காவின் வடகொரியாவிற்கான உதவிகள் தொடர்கின்றன.

அதேவேளை, இராணுவ ரீதியாக யுத்தத்தினை வடகொரியா மீது தொடுக்கும் எண்ணம் தமக்கில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். இருந்தபோதும் வடகொரியாவை ஈராக்குடன் ஒப்பிடுவது சரியான ஒப்பீடாக அமையாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தென்கொரிய வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில் - அமெரிக்கா வடகொரியாவுடன் பகைமை உணர்வை விலத்த எண்ணியுள்ளதாகவும், அதேவேளை- வடகொரியா தனது பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சுகளுக்குத் தயாராக இருப்பதாகவும் கருத்து வெளியிட்டுள்ளன.



வடகொரியத் தலைநகர் பியாங்யங்கில் கொரியத் தலைவர்கள்.

## கொலைமுயற்சியிலிருந்து மயிரிழையில் தப்பினார் வெனிசுவெலா ஜனாதிபதி!



(ஹரக்கஸ்)

ஐரோப்பிய பயணத்தினை முடித்துக் கொண்டு வார இறுதியில் நாடு திரும்பிய வெனிசுவெலா ஜனாதிபதி சிறகோ சாவேஸ் தான், கொலை முயற்சியில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பியதாகக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி சிறகோ சாவேஸ் பயணஞ்செய்த விமானம் மைகிடியா விமான நிலையத்திலிருந்து புறப்பட்டதும் திசை திருப்ப முயற்சிக்கப்பட்டதாகவும், அதேவேளை - மைகிறடியா விமான நிலையத்தில் தனது விமானத்தினை இறக்க அறிவுறுத்தப்பட்டபோதும், தான் லிரேட்டர் விமானத் தளத்தில் தரையிறங்கியதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை - ஜனாதிபதியின் பாதுகாப்புத் துறையினர் மைகிறடியா விமானத் தளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம்பெற்றதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

எனினும் சதிகாரர்கள் தப்பியோடி விட்டனர் என்றும், அவர்களது திகதிக் குறிப்பும் செல்லிடத் தொலைபேசி ஒன்றும் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - எதிர்க்கட்சிகள் பன்னிரண்டு மணிநேரப் பொது வேலை நிறுத்தத்திற்கு நேற்றுக் கோரிக்கை விடுத்திருந்தன. ஒன்றில் ஜனாதிபதி கிறகோ சாவேஸ் பதவி விலக வேண்டும் அல்லது விரைவில் தேர்தல் ஒன்றினை வைக்க வேண்டும் என அவை கோரியிருந்தன. இதனையொட்டி தலைநகர் ஹரக்கஸில் மூவாயிரம் துருப்பினர் குவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுக்கு 'ஹொவ்க்' ஜெட்கள் விற்பதற்கு ரொனி பிளேயர் ஆர்வம்



(லண்டன்)

ரொனி பிளேயர் பிரிட்டனது 'ஹொவ்க்' ஜெட்களைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்ப அறிவை இந்தியாவிற்கு விற்பதற்கான தனிப்பட்ட கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை - காஷ்மீரில் இந்திய அரசு பல்லாயிரக்கணக்கான துருப்புக்களை காஷ்மீரின் எல்லைப்பகுதிகளில் கடந்த வாரம் முதல் நிலை நிறுத்தியுள்ள நிலையில் இச்செய்தி வெளிவந்துள்ளது.

இதேவேளை - பிரிட்டனது வெளிவிவகார அமைச்சு கருத்துத் தெரிவிக்கையில் - 'ஹொவ்க்' ஜெட்கள் பிரிட்டனது மிகப்பெரிய பாதுகாப்புத்துறை உற்பத்தி திட்டம் எனவும் இந்த ஜெட்கள் பயிற்சிக்கு மிகவும் உகந்தவை என்றும்,

பயிற்சிக்கு உகந்ததாக உருவாக்கப்பட்ட இந்த ஜெட்கள் சண்டைக்கும் அதேவகையில் இலகுவாக மாற்றப்படக் கூடியவை எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை - தாம் இந்தியாவிற்கு ஜெட் தொழில்நுட்ப அறிவை விற்றது பற்றி வருத்தம் எதனையும் கொள்ளவில்லை எனவும், பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு கருத்து வெளியிட்டுள்ளது. இந்திய ஹிந்துஸ்தான் விமானக் கம்பனியானது ஜெட்டின் மூன்றில் இரண்டு பாகத்தை உற்பத்தி செய்துள்ளதாக 'கார்டியன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தற்போதைய யுத்த நெருக்கடி சூழ்நிலையில் - எல்லைப்புறங்களில் இருநாடுகளதும் ஒரு மில்லியன் துருப்புக்கள் குவிக்கப்பட்டிருந்தபோதும், கடந்த புதன்கிழமை முதல் துருப்புக்கள் சற்றே விலகி வருவது எல்லைப்புற நெருக்கடியை குறைக்க ஏதுவாயுள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

# போரால் சிதைவுற்ற வவுனியா வடக்கின் வேளாண்மை வளமும், வன அழகும்!

**வளமான விவசாய நிலங்களையும், ஏராளம் குளங்களையும், வனவளத்தையும் கொண்டுள்ள வவுனியா வடக்குப் பகுதி தமிழர்களின் மிகப் பெரும் சொத்தாகும். காலத்திற்குக் காலம் அந்நியக் குடியேற்றங்களாலும், தமிழர்கள் தங்கள் நிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டதாலும், பொலிவிழந்து கிடக்கும் இந்த மண்ணில் மீண்டும் ஒரு புத்துயிர்ப்பு நிகழ்வதற்கான சாத்தியக்கூறுகளை இந்தக் கட்டுரை ஆராய்கிறது.**

**- அறிதிரு**

**வவுனியா** மாவட்டத்தில் போரால் 99 வீதம் கட்டடங்கள், உட்கட்டுமானங்கள் அழிந்த ஒரேயொரு உதவி அரச அதிபர் பிரிவான வவுனியா வடக்கு (நெடுங்கேணி) மீளவும் புத்துயிர் பெறுகிறது.



1997 இல் ஜயசிக்குறு நடவடிக்கையில் இரவோடு இரவாக நகர்ந்த இராணுவம்-விடிகாலையில் தமது வீடுகளிலிருந்து விழித்துப் பார்த்த மக்களுக்கு பிரசன்னம் கொடுத்தது. நேரடியான இராணுவப் பிரசன்னத்தால் தம் உடைமைகள் எதையுமே எடுக்காத நிலையில் நெடுங்கேணியிலிருந்து மக்கள் யாவரும் அயல் கிராமங்களுக்குத் தப்பியோடினர்.

மறுபுறம் - கண்டி வீதியில் புளியங்குளம் நோக்கிய நகர்வை ஜயசிக்குறு இராணுவம் ஆரம்பித்த போது, வவுனியா வடக்கின் மேற்குப்புற மக்கள புதூர் நாகதம்பிரான் கோயிலில் தஞ்சமடைந்தனர். அந்த வேளை அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையகம் (UNHCR) அந்தச் சூழலை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி தனது கொடிகளை நாட்டியது. தொடர்ந்து நகர்வினை மேற்கொள்ளும் திட்டத்தில் இராணுவத்தின் கட்டளையால் ஓரிரு நாட்களில் UNHCR தன்கொடிகளை கழற்றிக் கொண்டு, பாதுகாப்பு வலயத்தை விட்டுப் பறந்தது. இராணுவத்தின் ஷெல்கள் விழ மக்கள் அங்கிருந்து நகர்ந்தனர். வவுனியா வடக்கின் முழுமையும் போர்க்களமாகியது. அதன் உட்கட்டுமானம் முழுவதும் தகர்ந்து இராணுவமயமானது.

1999 இல் விடுதலைப்புலிகள் ஓயாத அலைகள் 3 இல் வன்னியின் பகுதிகளை மீளக்கைப்பற்ற வவுனியா வடக்கு மீளவும் புத்துயிர் பெறத் தொடங்கியுள்ளது. இடம்பெயர்வின்போது வவுனியா வடக்கில் 4686 குடும்பங்களாகவிருந்த மக்கள் தொகையில் தற்போது வரை 2910 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளதாக வவுனியா வடக்கு உதவி அரச அதிபர் ஐயம்பிள்ளை கூறுகிறார். வீடுகளே இல்லாத நிலையிலும், கூரைகளே இல்லாத நிலையில் சுவர்களை மட்டும் கொண்ட வீடுகளிலுமே 2910 குடும்பங்களும் மீளக்குடியமர்ந்துள்ளன. எதுவித மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகளும் வழங்க ஏற்பாடு செய்யப்படாத நிலையில் இடம்பெயர்வு வாழ்வினை புறக்கணித்து இந்த மக்கள் மீளக்குடியமர்ந்திருக்கின்றனர்.

நெடுங்கேணி நகர்ப்புறத்தில் சில வீடுகள் இராணுவ தலைமையங்களாக இருந்ததால் மட்டும் தப்பின.

இராணுவ ஆட்டிலெறித் தளமாக இருந்ததால் குளவிசுட்டான் பாடசாலை மட்டும் முழுமையாக மேலும் ஒரு கட்டடத்தோடு கிடைத்தாக நெடுங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கூறுகிறார். வேறு எந்த ஒரு பாடசாலையும் முழுமையாக கிடைக்கவில்லை எனவும்- இங்கு மொத்தம் 42 பாடசாலைகள் உள்ளதாகவும் - அவர் மேலும் குறிப்பிடுகிறார். இவற்றில் ஒன்றிரண்டைத் தவிர ஏனையவை கொட்டில்களிலும், மரங்களின் கீழும் இயங்குகின்றன. ஆசிரியர் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை இயல்பான தொன்றாக இங்குள்ள பாடசாலைகளில் உள்ளன.

வவுனியா வடக்கிலுள்ள 100 கிராமங்களைக் கொண்ட 20 கிராம சேவையாளர் பிரிவுகளில் 7 கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர முடியாதநிலை காணப்படுகின்றது.

1984 இல் 24 மணி நேரத்துள் இராணுவத்தால் தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்ட பட்டிக்குடியிருப்பு, துவரங்குளம், காஞ்சுரமோட்டை, வெடிவைத்தகல், காட்டுப்பூவரசங்குளம், நாவலர்பண்ணை, கற்குளம் ஆகிய கிராமங்கள் மக்கள் மீளக்குடியமரமுடியாத நிலையில் இராணுவ முன்னரணுக்கருகாக உள்ளன. மக்கள் இவற்றில் மீளக்குடியமர அஞ்சுகின்றனர் என நெடுங்கேணி உதவி அரச அதிபர் கூறுகிறார். இந்த 7 கிராமங்களும் பற்றைகளடர்ந்து வீடுகளுள் செடிகள் விருட்சமாகிவிட்ட நிலையில் இருப்பதாக தமது வீடுகளை பார்க்கச் சென்ற மக்கள் கூறுகின்றனர். இக்கிராமங்களின் மக்கள் 18 ஆண்டு போரகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.




ஒரு சுற்றயல் கூறு மருத்துவ மனையாக பெயர்ப் பலகையை கொண்டுள்ள நெடுங்கேணி மருத்துவமனை ஒரு மருந்தகமாகக் கூட வசதிகள் இல்லாத நிலையில் உள்ளது. விடுதிக் கட்டடங்கள் யாவும் இழந்த நிலையில் தற்காலிக விடுதியாக போடப்பட்ட ஓலைக் கொட்டிலுக்கு நோயாளிகள் கட்டிலாக குழந்தைத் தொட்டில்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

முதலுதவி அளவு சிகிச்சைகளை நோயாளிகளுக்கு வழங்கிவிட்டு 17மைல் தூர்முள்ள புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு அவர்களை அனுப்புவதாக சுற்றயல் கூறு மருத்துவமனை மருத்துவ மாது ஒருவர் கூறுகிறார்.

(மிகுதி நாளை தொடரும்)




# மோட்டார் சைக்கிளும் காரும் இணைந்து....





மோட்டார் சைக்கிளும்-மோட்டார் வண்டியும் இணைந்து ஒரு வாகனமாகியுள்ளது. அதையே படத்தில் காண்கிறீர்கள். நெதர்லாந்தின் வென்டன் பிரின்ங் நிறுவனத்தின் காவர் (**Carver**) எனும் இந்த மோட்டார்வண்டி வீதியில், திருப்பங்களில் திரும்பும்போது முன்பக்க ஒற்றைச் சில்லும் வண்டியின் உடல் பகுதியும் மோட்டார் சைக்கிள் போன்று ஒரு பக்கம் 45 பாகைக்குச் சரியும். பின் சில்லுகள் அப்படியே இருக்கும். இயந்திரம் 65 குதிரை வலுவுடையது. 8 செக்கனில் 60 மைல் வேகத்தைத் தொடக்கூடியது. முழு வேகத்தில் மணிக்கு 150 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக் கூடியது.

# புதிய துருப்புக்காவி அறிமுகம்



அமெரிக்க இராணுவம் 8 சில்லுகள் கொண்ட துருப்புக்காவியைப் பாவனைக்குக் கொண்டு வந்துள்ளது. ஜெனரல் மோட்டர்ஸ் பாதுகாப்பு நிறுவனத்தால் இது தயாரிக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் ஆறு வருடங்களில் இத்தகைய 2131 துருப்புக்காவிகள் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 50 கலிபர் இயந்திரத் துப்பாக்கி அல்லது 40 எம்.எம். கிரேனட் செலுத்தியுடன் 105 எம்.எம். பீரங்கியும் இதில் பொருத்தப்பட்டுள்ளது. 23 அங்குல தடிப்புச் சுவரைத் தாண்டக்கூடியதுமாக ஏழு அடிகுழியைக் கடந்து செல்லக்கூடியதுமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. 6 கியர்களைக் கொண்டதான இவ்வாகனம் 350 குதிரை வலுவுடையது.




# அண்டவெளியில் உல்லாசபுரி

அண்டவெளியில் அந்தரத்தில் விண்வெளி ஆய்வு கூடங்களை நிறுவிக்கொள்வதில் முன்னர் போட்டி நிலவியது. அமெரிக்காவும் ரஷ்யாவும் போட்டி போட்டுக் கொண்டு விண்வெளி ஆய்வு கூடங்களை அமைத்தன.

இப்போது நிலைமை முற்றிலுமாக மாறிக்கொண்டிருக்கிறது. இந்த விண்வெளி ஆய்வுகூடங்களில் உல்லாசப் பயணிகளைத் தங்க வைத்துப் பெரும் பணத்தைச் சம்பாதிக்கும் முயற்சியில் ரஷ்யா இறங்கி விட்டது.

ரஷ்யாவின் ரொக்கட் ஒன்று விண்வெளி உல்லாசப் பயணி ஒருவரை அழைத்துச் சென்று விண்வெளி ஆய்வு கூடத்தில் பத்திரமாக இறக்கியதையடுத்து இந்த உல்லாசப் பயணத்திற்குச் செல்வதற்குப் போட்டி அதிகரித்திருக்கின்றது.

இதைக் கண்ட அமெரிக்காவும் நானும் விடுவேனா பார் என்று உல்லாசப் பயணிகளை விண்வெளிக்குக் கொண்டு செல்லும் நவீன விமானம் ஒன்றை 'நாஸா' வடிவமைத்திருக்கின்றது.



பல மில்லியன் டொலர் பணம் இருந்தால் நீங்களும் விண்வெளியில் உள்ள உல்லாசபுரிக்குப் பாதுகாப்பாகச் சென்று வரலாம்.



# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்



**அரங்கம் 04**



வேறு வழியில்லாமல் சிட்னி தொழிற்சாலையில் வேலையில் அமர்ந்தான். அங்கிருந்து அவன் ஏழைக்குழந்தைகளுக்கான மேற்கு நார்வுட் பள்ளிக்குச் சென்றான். அப்பள்ளிகள் காலத்திற்கு ஏற்ப சிறப்பாக செயல்பட்டாலும் தர்மத்தில் நடக்கும் நிறுவனங்களாகவே அவை கருதப்பட்டன. மூன்று மாதகாலங்கள் சிட்னி அங்கேயே இருந்தான். ஹன்னாவின் உடல்நிலை இன்னும் தேறாத நிலையில் அவன் தந்தை சார்லஸின் தகுதியற்ற பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டான்.

சார்லி உறவினர்கள் வீட்டில் தங்குவதற்காக அனுப்பப்பட்டான். அங்கு அவன் ஒன்றிரண்டு வாரங்களுக்குப் பள்ளிக்கு அனுப்பப்பட்டாலும், அவனுக்கு உண்மையான கல்விப்பயிற்சி கிட்டவே இல்லை.

ஹன்னா நலமடைந்தவுடன் சிறுவர்கள் தங்கள் வீட்டிற்கே திரும்பிச் சென்றனர். ஆனால் ஹன்னாவை மறுபடியும் தலைவலி தாக்க, மீண்டும் அவள் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டாள்.

அதிகாரிகள் நஷ்டத்துக்குள்ளானார்கள். தந்தை சார்லஸ் நல்ல வசதியுடன் இருந்தாலும், தன் குழந்தைகளின் பராமரிப்பிறகு அவர் ஏதும் கொடுக்கவில்லை. அவர்களுக்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது. "தந்தையின் கவனிப்பின்மையாலும், தாயாரின் ஆதரவற்ற நிலைமை மற்றும் உடல்நலக் குறைவாலும்" அவர்கள் ஹேன்வெல்லில் இருக்கும் மத்திய லண்டன் மாவட்ட ஏழைகள் சட்டப்பள்ளிக்கு அனுப்பப்பட்டார்கள்.

அப்பள்ளியின் விதிமுறைகள் கண்டிப்பானவை. வயதிற்கேற்றபடி சிறுவர்கள் பிரித்து வைக்கப்பட்டார்கள். சார்லிக்கு அப்போது ஏழு வயதும், சிட்னிக்குப் பதினொரு வயதும் ஆகியிருந்தது.

சிட்னி தனது சிறிய சகோதரனிடம் தந்தையைப்போல் நடந்து வந்தான். அதனால் நல்ல உணவும், விளையாட்டு மைதானங்களும், நீச்சல் குளங்களும் அவர்களுடைய இந்தப்பிரிவை ஈடுசெய்ய முடியவில்லை.

அங்கு சார்லிக்கு நடந்த மிகப்பெரிய கொடுமை, அவனை 'ரிங்வர்ம்' என்ற தோல் நோய் தாக்கியதுதான். அதனால் அவன் தலைமுடியை மழித்து அ[illegible] அயடின் பூச வேண்டியிருந்தது தான். துக்கப்பட்டவனைப்போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. இன்னொரு துயரச்சம்பவம், மோசமான நடத்தைக்காக அவன் நியாயமற்ற முறையில் குற்றம் சாட்டப்பட்டு அதற்குத் தண்டனையாகப் பிரம்பினால் மூன்று பலத்த அடிகள் பெற்றதுதான். இத்தனை நியாயமற்ற சூழ்நிலைகளிலும் தான் சந்தோஷமாகவே இருந்ததாக சார்லி தன் சுயசரிதையில் நினைவு கூருகிறார். பதினெட்டு மாதங்கள் ஹென் வெல்லில் இருந்த பிறகு 18.01.1898 அன்று சார்லி தன் தாயைக் காண வீடு திரும்பினான். இரண்டு நாட்களுக்குப் பிறகு சிட்னியும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். அவர்கள் கடுமையான வறுமையில் இருந்தனர். பாழடைந்த ஒரு அறையிலிருந்து இன்னொரு அறைக்கு மாறிக் கொண்டே இருந்தனர். ஒவ்வொன்றும் முந்தியதை விட மோசமானதாகவே இருந்தது.

விரைவிலேயே அவர்கள் ஏழைகளின் விடுதிக்கும் பள்ளிக்கும் செல்ல வேண்டியிருந்தது. மகன்களைச் சந்திக்க ஹன்னா அனுமதிக்கப்படவில்லை. ஆனால் அவள் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டவளாக இல்லை. மறுபடியும் வீடு அமைத்துக் கொள்ளத் தன்னிடம் இப்போது கணிசமான பணம் இருப்பதாக அதிகாரிகளிடம் கூறினாள். அவர்கள் சார்லியையும் சிட்னியையும் விடுதி வாசலில் அவளிடம் ஒப்படைத்தனர்.

அங்கிருந்த அவர்கள் கென்னிங்டன் பூங்காவிற்குச் சென்றார்கள். சிட்னி ஒன்பது பென்னிகள் சேமித்திருந்தான். நீண்ட கலந்தாலோசனைக்குப் பின்னர் அவர்கள் அரை பவுண்ட் கறுப்பு செர்ரிப்பழம் வாங்குவதிலும், இரண்டு பென்னிகள் டீ கேக் வாங்குவதிலும், ஒரு பென்னியில் ஒரு வகை கடல்மீன் வாங்குவதிலும், இரண்டரை பென்னி தேநீர் கோப்பைகள் வாங்குவதிலும் செலவு செய்தார்கள். இவை எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டார்கள். சிட்னி செய்தித்தாள் மற்றும் நூலின் உதவியுடன் ஒரு பந்து தயார் செய்தான். வீட்டிற்கு செல்ல நேரமாகிவிட்டது என்று ஹன்னா சொல்லும்வரை அவர்கள் மதியம் முழுவதும் விளையாடினார்கள்.

மறுபடியும் விடுதிக்கு திரும்பினார்கள். புதிய வீடு அமைக்க ஹன்னாவிடம் வசதி இருக்கவில்லை. அவருடைய துடுக்குப் பேச்சைக் கேட்டு அதிகாரிகள் திடுக்கிட்டார்கள். அத்தகைய ஆவணத்தைக் கண்டிக்க அவர்களிடம் எந்தவித சட்டதிட்டங்களும் இருக்கவில்லை. அந்தச் சிறுவர்களின் சந்தோஷத்துக்கேற்ப வார இறுதி விடுமுறையை அவர்கள் விடுதியில் தங்கள் தாயுடனேயே கழித்தார்கள்.

இரண்டே வாரங்களுக்குப் பிறகு ஹன்னா விடுதியிலிருந்து மறுபடியும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள்.நார்வுட் பள்ளியிலிருந்த மகன்களுக்குச் செய்தி தெரிவிக்கப் பட்டது. கூடவே தன் கஷ்டங்களினால் இறுதியில் உடைந்து போன அவர்களுடைய தாய் மனநிலை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் அவர்களின் தந்தையிடம் அனுப்பப்படுவார்கள் என்றும் கூறப்பட்டது. அது அவர்களுக்கு ஒரு பயங்கரமான திகில்ன நாளாக இருந்தது.

அவர்கள் தந்தை சார்லஸின் வீட்டிற்கு ரொட்டி வண்டியில் அழைத்துச் செல்லப்பட்டனர்.லூஸி என்ற சோகமான ஆனால் பற்றுதலுடைய பெண்மணியுடன் வாழ்ந்து வந்தார் சார்லஸ். சார்லசுடன் லூஸியும் எப்போதும் மது மயக்கத்தில் மிதந்தார்கள். ஹன்னா கூறியதுபோல் அந்த வீடு அச் சிறுவர்கள் தங்குவதற்கு உகந்ததாக இருக்கவில்லை. சார்லஸ் அமைதியாக இருந்த நேரங்களில் மகிழ்ச்சியாக காணப்பட்டார். ஆனால் அவர் எப்போதாவதுதான் அமைதியாக இருந்தார். மது அருந்தியபின் ஏற்பட்ட விவாதங்களிலும் கூப்பாடுகளிலும் சண்டை சச்சரவுகளிலும் சிறுவர்களுக்கு கிலி ஏற்பட்டது. ஒருநாள் மாலை வீடு திரும்பிய சிறுவன் சார்லி, கதவு பூட்டப்பட்டிருப்பதைப் பார்த்தான். என்ன செய்வதென்றே புரியவில்லை. விடிவதற்கு இன்னும் பல மணி நேரங்கள் இருந்தன. அவன் தஞ்சம்புக வேறு எவரும் இருக்கவில்லை.

பொழுதைக் கழிக்க சார்லி களையற்ற அந்தத் தெருக்களில் இருட்டான சந்துக்களைத் தவிர்த்து கால் போன போக்கில் அலைந்தான். குடிகாரர்கள் மோதினார்கள். தம்பதிகள் சிரித்து பேசியபடி கடந்து சென்றார்கள். திறந்த ஜன்னல்களின் வழியாகக் குழந்தைகளின் ஒலிகளும், பாட்டுகளும், கூப்பாடுகளும் கேட்டன. சார்லி தனிமையை உணர்ந்தான்.


இறுதியில் அவன் ஒரு பொது விடுதியின் முன் வந்து சேர்ந்தான். சொர சொரப்பான கண்ணாடிகளின் மூலம் உட்புறத்து விளக்கொளி வெளியே பிரகாசித்தது. திறந்திருந்த வாயிற் கதவின் வழியாக பளபளக்கும் மரவேலைப்பாடுகளும், மினுமினுக்கும் பித்தளைப் பொருட்களும் தெரிந்தன. விடுதியின் உள்ளே தோழமையின் கதகதப்பில், திளைத்திருக்கும் மக்களை பற்றி பொறாமையுடன் யோசித்தான்.

ஒருவர் கிளாரினட்டில் ஒரு பாட்டை இசைக்கத் தொடங்கினார்.

அதுநாள் வரை கேட்டிராத அழகான, நம்பிக்கையூட்டும் இசையாக அது அவனுக்குத் தோன்றியது. லண்டன் நகரத்து ஓர் மதுக்கடையின் வாயிலில் கழிந்த இந்த சில வினாடிகள் தான் அவனை இசையில் ஆர்வமுறவைத்தது. அதை மறக்கவில்லை. ஒரு நாள் அவனும் உலகத்தையே மகிழ்விக்கும் இசையை உருவாக்க வேண்டியவன் தானே!

(அடுத்த அரங்கில் தொடரும்)

# விமான நிலையங்களில் பாதுகாப்பு முறைகள்



1903 இல் றைற் சகோதரர் விமானத்தை கண்டுபிடித்ததில் இருந்து மனிதன் வானில் பறப்பதற்கு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டான். இன்று விண்வெளிக்கு சுற்றுலா செல்வது என்றவரைக்கும் இது வளர்ச்சியடைந்துள்ளது.

வானில் பறக்கும்போதே அதனுடன் சேர்ந்து பாதுகாப்பு என்ற செயலும் கூடவே வருகின்றது.




எவ்வளவோ பாதுகாப்பு ஏற்பாடு இருந்தாலும் அச்சுறுத்தல் இருந்து கொண்டே இருக்கின்றது. அண்ணளவாக 60 மில்லியன் மக்கள் விமான நிலையத்தினுடாக வருடமொன்றுக்கு கடந்து செல்கிறார்கள்.

கடந்த 2 வருடங்களாக பிரித்தானிய விமான நிலைய அலுவலர்கள் சாதாரணமாகவே பின்வரும் பாதுகாப்பு விடயங்களைபட பின்பற்றுகின்றனர்.

1. நாய்களைக் கொண்டு பரிசோதிப்பது. **(SNIFFER DOG)**
2. குண்டுகளை அடையாளம் காணுதல்(**3 D cat scan** தொழில்நுட்பம்)
3. மனிதர்களால் பரிசோதிப்பது.

இந்த மூன்றையும் கடந்து உள்ளே போகும் கடத்தல்காரர்களும் இருக்கவே செய்கின்றனர்.

# கண்ணின் வழியே கள்வனைக் கண்டுபிடிக்கலாம்!



பிரச்சினைக்குரியவர்களை கண்டுபிடிப்பதற்கு மிக அண்மையில் முகங்களை அடையாளம் காணும் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை ஐஸ்லாந்து சர்வதேச விமான நிலைய அதிகாரிகள் அறி முகப்படுத்தினர். இதன்மூலம் பன்னிரண்டு அடையாளங்களைக் கொண்டுபிரச்சினைக்குரியவர்களை கண்டுபிடிக்கலாம். ஆனாலும் இது பூரணமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதில் கண்ணின் ஐரிஸ் அடையாளம் காணுதல் என்பது முக்கியமானதாகும். இது கை ரேகையிலும் பார்க்க அடையாளம் காண்பதற்கு இலகுவானதாக நம்பப்படுகிறது. பார்த்தீர்களா விஞ்ஞானத்தின் வளர்ச்சியை!

# இவரைத் தெரியுமா?



இவரை உங்களால் அடையாளம் காணமுடிகிறதா? அரசியலில் இருந்து ஓய்வு பெறவேண்டிய நிலைக்கு வந்திருக்கும் இவர் தனது பெயரை அழகான தமிழில் அருட்செல்வன் என மாற்றிக் கொள்ள அறிஞர் அண்ணாவிடம் அனுமதி கேட்டிருந்தார்.

அப்போது இவரது தோழர் ராமையா அன்பழகனாக மாறியிருந்தார். நாவலர் நெடுஞ்செழியன், மதியழகன் ஆகியோர் அழகிய தமிழ்ப் பெயர்களைக் கொண்டிருந்தனர்.

இதனால் தனது பெயரையும் அருட்செல்வன் என மாற்றிக் கொள்ள அண்ணாவிடம் அனுமதி கேட்டிருந்தார். அதற்கு உனது பெயரே அழகான யாவரும் அறிந்த பெயர் தானே என்று மாற்ற வேண்டாம் எனக் கூறிவிட்டார்.

அருட்செல்வனாக மாறியிருக்க வேண்டிய அந்தஅரசியல் வாதி யார் என்று நினைக்கிறீர்கள்? இப்போதாவது தெரிகிறதா..? கலைஞர் கருணாநிதியே தான்....!

# இது என்ன கோட்டையா?



இது என்ன ஏதோ ஒரு கோட்டையின் மதிற்சுவர் என்றா நினைக்கிறீர்கள்...? இல்லவே இல்லை.

தமிழ் விவசாயிகள் சூரியனுக்கு நன்றி செலுத்தும் வகையில் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடுவது வழமை. இதுபோன்று நாட்டுக்கு நாடு சூரியனுக்கும் பூமிக்கும் நன்றி செலுத்தும் விழாக்களைக் கமக்காரர்கள் கொண்டாடுவது வழமை.

ஜேர்மனியிலும் கமக்காரர்கள் பூமிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மண்ணில் உற்பத்தியான பயிர்கள், பழங்கள், காய்கறிகளை வைத்துத் திருவிழா கொண்டாடுவது வழக்கம்.

இந்தத் திருநாளை ஒக்ரோபர் பெ(**f**)ஸ்ட் (**October Fest**) என்று அழைப்பார்கள். இந்தத் திருவிழாவில் இடம்பெற்ற 15 மீற்றர் உயரமுள்ள பூசனிக்காய்களால் அடுக்கப்பட்ட பிரமிட்டையே இங்கு காண்கிறீர்கள்.

ஜேர்மனியின் லுட்விக்ஸ்பேர்க் நகரில் இடம்பெற்ற ஒக்ரோபர் பெ(**f**)ஸ்ட் திருவிழாவில்தான் இது வைக்கப்பட்டிருந்தது.

# நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்



இன்று எமது சமுதாயத்தில் முக்கியமாக இரண்டு விதமான குடும்பங்களைக் காணமுடிகின்றது.

விசாலமான பரந்த குடும்பம் அல்லது பெரிய கூட்டுக் குடும்பம்.

*தனிக்குடும்பம் மற்றையது*

**பெரிய கூட்டுக் குடும்பம்**

இதிலே இரண்டு வகையுண்டு. ஒன்று கணவன், மனைவி இருவரது பெற்றோர், சகோதரர், பிள்ளைகள் எல்லோரும் ஒன்றாக வாழ்வது. ஏறக்குறைய இருபது, முப்பது அங்கத்தவரைக் கொண்டது.

அடுத்தது சிறு அளவிலான கூட்டுக் குடும்பம், கணவன்,மனைவி பெற்றோர் பிள்ளைகள் ஒன்றாக வாழ்வது.

**தனிக்குடும்பம்**

கணவன், மனைவி திருமணம் முடிக்காத பிள்ளைகளைக் கொண்டது தனிக் குடும்பமாகும். வெளிநாடுகளில் திருமணம் முடிக்காத வளர்ந்த பிள்ளைகளை இதில சேர்ப்பதில்லை. இலங்கையிலே திருமணம் முடிக்கும் வரை பிள்ளைகள் பெற்றோருடன் வாழ்வர்.

இலங்கையிலே தனிக் குடும்ப முறை அதிகமாகப் பரவி வருகிறது. இன்று திருமணத் தம்பதியினர் தனிக் குடும்ப முறையையே அதிகம் விரும்புகின்றனர்.

கூட்டுக்குடும்பத்திலும் தனிக் குடும்பத்திலும், நன்மை, தீமை இரண்டும் உள்ளது. பெரிய கூட்டுக் குடும்பத்தில் வயதுக்கு மூத்தவரே குடும்பத்தில் நிர்வாகத்தைச் செய்வார். ஏனையோர் அவரைக் கேட்டே இறுதி முடிவெடுப்பர். ஆனால் தனிக் குடும்பத்தில் ஆண் அல்லது பெண் அல்லது இருவரும் தீர்மானம் எடுப்பர்.

கூட்டுக் குடும்பத்தில் தனி நபரது நன்மையை விட குடும்பத்தின் நன்மையையே முக்கியமாகக் கருதுவர். காணியை விற்கும்பொழுது, ஒருவரைத் திருமணம் முடிக்கும் பொழுதும் குடும்ப நன்மையையே கருத்தில் கொள்வர். இவரைத் திருமணம் முடிப்பதால் குடும்பத்துக்கு நன்மையுண்டா? இந்தக் காணியை விற்பதால் விலை குறைந்தாலும் குடும்பத்துக்கே நன்மை வரவேண்டுமென எதிர்பார்ப்பர். தனிக் குடும்பத்தில் தனி நபருக்குச் சுதந்திரம் அதிகமுண்டு. திருமணத்துக்காகப் பிள்ளை ஒருவரைத் தெரிவு செய்த பின் பெற்றோருக்குத் தெரி விப்பர். பெற்றோர் விரும்பினாலும், விரும்பாமலிருந்தாலும் திருமணம் முடிப்பர். அதாவது பெரிய கூட்டுக் குடும்பத்தில் வயது முதிர்ந்தவரே தீர்மானம் எடுப்பார். தனிக் குடும்பத்தில் திருமணம் முடிப்பவர், இல்லையேல் பெற்றோர் முடிவெடுப்பர்.

கூட்டுக்குடும்பத்தில் உடை வாங்கும்போதும் ஒரே விதமான உடையையே எல்லாப் பிள்ளைகளுக்கும் ஆண், பெண் வேறுபாட்டிற்கேற்ப வாங்குவர்.

கூட்டுக்குடும்பங்களில் பிள்ளைகளுக்குத் தனிமை, வேதனை குறைவாக இருக்கும். பெற்றோரின் தண்டனைக்குப் பிள்ளை ஆளாகும் போது குடும்பத்தில் மற்றவர்களின் அரவணைப்பு, அன்பு, ஆறுதல் கிடைக்கும் தாங்கமுடியாத தனிமை, வேதனை உணர்வு இருக்காது. பாதுகாப்புணர்வு கூடுதலாக இருக்கும்.

பிள்ளைகளுக்கு மட்டுமல்ல வயதாகியவர்களுக்கும் பாதுகாப்புணர்வுண்டு. வயது போனாலும் தம்மிடம் கேட்டே செயல்படுவதால் நாம் இன்னும் வாழ்கிறோம், புறக் கணிக்கப்படவில்லை என்ற உணர்வு இருக்கும்.

ஆனால் தனிக்குடும்பங்களில் பிள்ளைகள் தனிமை, வேதனை உணர்வை அதிகம் அனு பவிப்பர். அப்பா அடிக்கும்போது "அப்பா எனக்கு அடிக்கவேண்டாம்" என்று தந்தையிடமே அழுது கொண்டு செல்லும். அதேபோன்று வயது வந்தவர்களுக்கும் அதிக பாதுகாப்பு இல்லை. ஒவ்வொரு சகோதரரும் பெற்றோரை மாறி மாறிப் பார்க்க வேண்டிய நிலையிருக்கும். "நான் மட்டும் தானா பிள்ளை. அக்காவும் பிள்ளைதானே. அங்கேயும் போய்க் கொஞ்சக்காலம் இருக்கலாம் தானே" என்று பெற்றோருக்குக் கூறும நிலைவரும்.

கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதாயின் பிள்ளைகளைப் பார்க்க யாரும் இருப்பதில்லை. வேலைக்காரரே தேவைப் படுவர். பெற்றோர் வீட்டில் இருந்தால் தமது பிள்ளைகளைப் பார்க்கவே பெற்றோரை வீட்டில் வைத்திருப்பர். இல்லையேல் பெற்றோரால் எவ்வித உதவியும் எமக்கில்லை எனக் குறைபட்டுக் கொள்வர்.

கூட்டுக்குடும்பத்தில் தீர்மானம் எடுக்கும்போது பெரியவரிடம் ஆசீர்வாதம் கேட்கும் நிலை இருக்கும். இதனால் பெரியவர் மதிக்கப்படுவர்.

தனிக்குடித்தனத்தில் கணவன், மனைவி தீர்மானம் எடுப்பதால் பெற்றோரைப் புறக்கணிப்பதாக பெற்றோர் வேதனைப்படுவர். அதே போன்று எமது குடும்பத்தில் விவாகரத்துக் கூடுதலாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையில் பிரச்சினை ஏற்பட்டதும் கூட்டுக் குடும்பத்தில் பெரியவர் தலையிட் டுத் தீர்த்து வைத்துவிடுவர். தனிக் குடும்பத்தில் பிரச்சினை ஏற்பட்டதும் தீர்த்து வைக்க யாரும் இருப்பதில்லை.

இவ்விரு வகையான குடும்பங்களில் ஒன்றிலேயே நாம் வாழ்கிறோம். அல்லது வாழப்போகிறோம்.முன்னைய காலங்களை விட இன்று குடும்பப் பொறுப்புக்கள் வேறுபட்டவையாக இருக்கின்றன. முன்பு பொறுப்புக்கள், செயற்பாடுகள் கொண்ட வாழ்வு இருந்தது. கணவன் இந்த பொறுப்பையும் மனைவி இந்தப் பொறுப்பையும் செய்ய வேண்டுமென்றநிலை இருந்தது. அதாவது கணவன் பொருளாதாரத்தைத்தேடுவது, மனைவி பிள்ளைகளைப்பாதுகாப்பது, மனைவி பிள்ளைகளை வளர்ப்பது, உணவுசமைப்பது , வீட்டைப் பார்த்துக் கொள்வது போன்ற கடமைகள் சமுதாயத்தால் கொடுக்கப்பட்டிருந்தன.

ஆனால் இன்று இந்த நிலை மாறிக் கொண்டு வருகின்றது. சமுதாயத்தில் கொடுககப்படும் பொறுப்புக்களைப் பாராது தமது தனிப்பட்ட நன்மையைக் கருதிச்செயற்படுவர். மனைவி வேலைக்குச் செலகிறாள். அதனால் இருவரும் சேர்ந்து சமைக்கின்றனர். இருவரும் சேர்ந்து பிள்ளைகளைப் பார்க்கின்றனர்.

வேகமாக மாறிவரும் உலகிலே நாம் இன்று வாழ்கிறோம். முன்பு திருமணத்துக்கு ஆயத்தங்கள் இருக்கவில்லை. ஆனால இன்று விவாக வாழ்வுக்குப் பல ஆயத்தங்கள் தேவைப்படுகின்றன. இந்த ஆயத்தங்கள் இல்லாததால் தான் விவாக வாழ்வு சிக்கலாகிக் கொண்டு செல்வதைக் காணமுடிகிறது.

**எஸ்.ஜெ.யோகராஜா**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*ஒவ்வொருவரது செயலும் அவரது உள்மனதை வெளிக்காட்டப் போதுமானதாகும்.*

-ஜோன் லூயி

# நமது நோக்கு

## அரசியல் சுயலாபம்!

தென்னிலங்கையில் மீண்டும் அரசியற்களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. மாற்று அரசாங்கமா? பொதுத்தேர்தலா? என்றவாறு முக்கிய கட்சிகளிடையே பெரும் வாதப் பிரதிவாதங்களும் தோற்றம் பெற்றுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியிலும், பொது ஜன ஐக்கிய முன்னணியிலும் நிலவும் உட்கட்சிப் பிணக்குகள், தலைமைப் போட்டிகள், குழிபறிப்புக்கள் என்பன வேகங்கொள்ளும் அதேவேளை-

எங்கு சந்தர்ப்பம் கிடைக்கும் எனக் காத்துள்ள ஜே.வி.பி.யும் தனது பங்கிற்கு அரசியற் குழப்பங்களை உண்டாக்கி வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சிகளின் மீதான உறுதியான நகர்வுகளுக்கு, இடைஞ்சல் தருபவர்களாக அவரது அணிக்குள்ளேயே காணப்படும் ஒரு சில மூத்த அமைச்சர்களைக் கொண்டு அரசாங்கத்தைப் பலவீனமான நிலைக்கு ஆளாக்க பொது ஜன ஐக்கிய முன்னணி தீவிரமாக முயன்று வருகின்றது.

இதற்காக- ஓரளவுக்காவது நியாயத்தன்மையுடன் செயற்படுபவர் என அரசியற் கட்சிகளால் மதிக்கப்படும், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை ஒதுக்கிக் கொண்டு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது நேரடியான நடவடிக்கைக்குள் கட்சியைக் கொண்டு வந்திருக்கிறார்.

இதன் ஒரு கட்டமாக- தனக்கு நம்பகமான கட்சிப் பிரமுகர்களை அழைத்து இரகசியக் கூட்டமொன்றையும் தனது வீட்டில் அவர் நடத்தியிருக்கிறார்.

மஹிந்த ராஜபக்ஷவை புறந்தள்ளுவதன் மூலம், தனக்கடுத்து பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைமைப் பதவிக்கு- உரிமை கோரும் தனது சகோதரன் அனுரா பண்டாரநாயக்காவுடனான மிக முக்கிய போட்டியாளரை களத்திலிருந்து விலக்கு முகமாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

இதனூடாக-தனது குடும்ப ஆதிக்கம் மிகுந்ததாக பொது ஜன ஐக்கிய முன்னணியைத் தக்க வைத்திருக்கவும் அவர் முயற்சிக்கிறார் என்றே கூறலாம்.

இதேவேளை-மாற்று அரசாங்கம் என்ற கருத்தானது, புதியதொரு தேர்தலைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா காட்டும் தயக்கத்தையும் வெளிக்காட்டுவதாகவுள்ளது.

புதியதொரு தேர்தலைச் சந்திப்பதன் மூலம்- தற்போதுள்ள பாராளுமன்றப் பலத்தினை இழந்துவிடலாமென்ற அச்சமும், அதன் வழியாக தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தை அகற்றிக் கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இன்னமும் தீவிரம் கொள்ளும் என்ற அச்சுறுத்தலும்-ஜனாதிபதி சந்திரிகாவை எதிர்நோக்கியுள்ளன.

இதேவேளை-உயர்நீதிமன்றம், அரசாங்கத்தினது 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் பற்றி வெளியிட்டுள்ள தீர்ப்பும்-ஜனாதிபதி சந்திரிகாவின் பக்கத்திற்கு வலுச்சேர்த்துள்ளது.

இவ்வாறான சூழலில்-ரணில் அரசாங்கத்தை நெருக்குதலுக்கு ஆளாக்கும் சகல வழிகளிலும் அவர் ஆர்வம் காட்டுபவராக உள்ளார்.

இந்த நிலைமைகளின் கீழ் அமைதி முயற்சிகள் பற்றிய எந்த வித உணர்வுகளுமற்று, ஆட்சியைப் பிடிப்பதும், அதனைத் தக்க வைப்பதுமென ஜனாதிபதி சந்திரிகாவும், பொது ஜன ஐக்கிய முன்னணியும் மேற்கொள்ளும் முயற்சிகள்-தமிழர் பிரச்சினை பற்றிய எந்தவொரு கவனஈர்ப்போ, கவலையோ அவர்களுக்கு இல்லாதிருப்பதையே காட்டுகின்றன.

மிகப் பெரும் முயற்சிகளின் பின்னர் இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலை கருத்திற் கொள்ளாது ஆட்சியொன்றே தனது இலக்கு என ஜனாதிபதி சந்திரிகா கருதுவாரானால்-அதன் பின்னர் எழக்கூடிய சூழல், அவரது தனிப்பட்ட எதிர்பார்ப்புக்களையும் நம்பிக்கைகளையும் மீண்டுமொரு முறை வெகுதூரத்திற்கப்பால் கொண்டு சென்று விடுமென்பதே உண்மையாகும்.

# வடக்கு, கிழக்குக்கு 50 வீதம் நெதர்லாந்து நிபந்தனை உதவி

(கொழும்பு)

நெதர்லாந்து அரசாங்கம் இலங்கைக்கு சுமார் 10 கோடி ரூபா உடனடி உதவியை வழங்கவிருப்பதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும், தென்பகுதியில் வரட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்குமான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவுமே இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்து அரசாங்கம் இந்த நிதியுதவியை இலங்கைக்கு நிபந்தனையின் அடிப்படையில் அடிப்படையிலேயே வழங்கியிருக்கின்றது. வழங்கப்படும் நிதியில் 50 சதவீதம் வட-கிழக்குப் புனர்வாழ்வுக்கும் செலவிட வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்நிதி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானிய நிர்வாக முறை இனி எமக்கு வேண்டாம்!

## அமைச்சர் அபேவர்த்தன தெரிவிப்பு

(நமது நிருபர்)

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பிரித்தானிய நாட்டை ஒத்த நிர்வாக முறையை மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதற்கு உலக வங்கி நிதியுதவி வழங்கவுள்ளது.

-இவ்வாறு அமைச்சர் வை.ஜே. அபேவர்த்தன தெரிவித்தார்.

அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொது நிர்வாக அமைச்சின் நடமாடும் சேவையில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது- இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அனைத்து அரச ஊழியர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சர் பி.ஜெயரத்ன, வடக்கு கிழக்கு ஆளுநர் அசோக ஜெயவர்த்தன, மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் மாகாண அமைச்சின் அதிகாரிகள் மேற்படி நடமாடும் சேவையில் பங்குபற்றினர். (43)

# நீர்வேலி, கரந்தன் பகுதிகளில் தொற்று நோய் பரவும் ஆபத்து

(ஊரெழு)

தற்போது இடம் பெற்றுவரும் பருவமழை காரணமாக மழை வெள்ளம் கிணறுகளில் உட்புகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நீரினால் பரவும் தொற்று நோய்கள் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் மழைக் காலத்தில் சுகாதார வைத்திய அதிகாரிகளினால் கிணறுகளுக்கு குளோரின் போடப்படுவது வழமையாகும்.

ஆனால் இவ்வருடம் இது வரை அவ்வாறு செய்யப்படாததால் - கரந்தன், நீர்வேலி பகுதிகளில் தொற்று நோய்கள் பரவக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சதுரங்கப் போட்டியில் தெரிவான வீரர்கள்

இலங்கை சதுரங்க சம்மேளத்தினால்- இலங்கை சம்பியன் தெரிவு, இலங்கை அணித் தெரிவு ஆகியவற்றுக்கான ஆரம்பகட்டப் போட்டி யாழ்ப்பாணம் சதுரங்க சம்மேளத்தினூடாக யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெற்று வந்தது. இப் போட்டிகள் நேற்று முன்தினம் முடிவடைந்தன. இப்போட்டியிலிருந்து அடுத்த கட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

எஸ். திருச்செல்வம் (வடமராட்சி), செல்வன். கோபிகணேஷ் (யாழ் இந்துக் கல்லூரி), செல்வி பி. நிவேதிகா (வேம்படி மகளிர் கல்லூரி), சுஜதீப் (மகாஜனா கல்லூரி பழைய மாணவன்)

இப்போட்டியில் 68 வீரர்கள் பங்கு பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (55)

# நிமலராஜன் கொலை வழக்கை விசாரிப்பதற்கு அதிகாரிகள் தடையாக இருக்கின்றனர்

## சர்வதேச ஊடக அமைப்புக்கள் குற்றஞ்சாட்டு

(கொழும்பு நிருபர்)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை தொடர்பான விசாரணைகளுக்கு அதிகாரிகள் தடையாக இருப்பதாக' ஊடகவியலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இரண்டு சர்வதேச அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

ஊடகவியலாளர் நிமலராஜனின் கொலை தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் எதுவும் காணப்படாதமை குறித்து அதிருப்தி தெரிவித்துள்ள, எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு (ஆர்.எஸ்.எவ்.) மற்றும் டமோக்லஸ் நெற்வேக் ஆகிய இரண்டு அமைப்புக்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளன.

இக்கடிதத்திலேயே நிமலராஜன் கொலை வழக்கைத் துரிதப்படுத்துவதற்கு அதிகாரிகள் தடையாக இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றது. அக்கடிதத்தில் மேலும், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நிமலராஜன் கொலை தொடர்பான முன்னேற்றகரமான சட்ட நடவடிக்கையாக சிலர் கைது செய்யப்பட்டதைக் குறிப்பிடலாம். ஆனால் கைதான சந்தேக நபர்களில் இருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். மூன்றாமவர் வெளிநாடு செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இதனால் கொலை தொடர்பான விசாரணைகள் முடங்கிப் போயிருக்கின்றன என்றும் அவை சுட்டிக் காட்டியிருக்கின்றன.

இதேவேளை- இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, நிமலராஜன் கொலை வழக்குத் தொடர்பாகத் தனிப்பட்ட ரீதியில் விசாரணைகளில் கவனம் செலுத்தப்போவதாகத் தெரிவித்திருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தச்சன்தோப்பு உப தபாலகத்தை மீளச் சொந்த இடத்தில் இயக்குக

(கொக்குவில் மேற்கு)

தச்சன்தோப்பு உப அஞ்சல் அலுவலகத்தை மீண்டும் சொந்த இடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்குமாறு - அப்பிரதேச மக்கள் நாவற்குழி கிராம அலுவலர் ஊடாக - வடபிராந்திய அஞ்சல் மா அதிபருக்கு மகஜர் ஒன்றை சமர்ப்பித் துள்ளனர்.

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற - கிராம அபிவிருத்திக் குழுக்கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தச்சன்தோப்பை அண்டிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்கள், - நாளாந்தத் தொடர்பாடல், சிறு சேமிப்பு, மாதாந்த உதவிப்பணம் என்பவற்றை பெறுவதற்கு உதவியாக அஞ்சலகத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு அத்தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது. (108)



# குறைதீர் மன்றம்

இலங்கை மின்சாரசபையினர் 1999 ஆண்டு கோப்பாய் பெந்தக்கோஸ் சபை இருக்கும் காணியின் மரங்களை வெட்டினார்கள். அப்பொழுது ரூபா 2000 நஷ்டஈடு தருவதற்காக என ஒரு பணப்பத்திரத்தில் கோப்பாய் மத்தி கிராம சேவையாளர் மூலம் என்னிடம் கையொப்பம் பெற்றனர். பணப்பத்திரம் கொடுத்த பின்னர் என்னைத்தவிர ஏனையவர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டு விட்டது. நான் சென்று இது தொடர்பாக விசாரித்ததற்கு பணப்பத்திரத்தில் எனது பெயர், முகவரி என்பன குறிப்பிடப்படவில்லை என்றும், எனவே பணப்பத்திரத்தினை கிராமசேவையாளரிடமும், மேலதிக அரசாங்க அதிபரிடமும் உறுதிப்படுத்திவரும்படியும் கூறினார்கள்..

அவர்கள் கூறியபடி அவ்வாறே செய்ததன் பின்னர் 08.06.2000 அன்று மின்சாரசபைக்குச் சென்றபோது எனது பணப்பத்திரத்தினை ஒரு அதிகாரி கிராமசேவையாளரிடம் உறுதிப்படுத்த எடுத்துச் சென்றதாக ஒரு எழுதுவினைஞர் கூறினார். இது தொடர்பாகப் பல தடவைகள் இவ்விடயம் தொடர்பான பல அதிகாரிகளுக்கு கடிதம் எழுதிய போதும் எனக்குப் பணம் எதுவும் கிடைக்கவில்லை.

வ.வி.வரதராசன்,
'பூரணம்',
கோப்பாய் - தெற்கு,
கோப்பாய்.

**'நமது ஈழநாடு'-**

தங்களின் முறைப்பாடு தொடர்பாக இலங்கை மின்சார சபையினருடன் நமது ஈழநாடு தொடர்பு கொண்டு கேட்ட போது, தங்களை காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்திலுள்ள பொறியியலாளர் வேலுப்பிள்ளையின் கீழ் இயங்கும் கட்டுமானப் பகுதிக்கு, பொதுமக்கள் சந்திக்கும் தினமான புதன்கிழமைகளில் தங்களை நேரடியாக வரும்படி கூறப்பட்டுள்ளது.

# வூட்றோ வில்சனின் சுயநிர்ணயமும் விளாடிமிர் லெனினது சுயநிர்ணயமும்!

## சுயநிர்ணயம் - ஒரு பார்வை பகுதி- 4



விளாடிமிர் லெனின்



வூட்றோ வில்சன்

சர்வதேச அரங்கில் 'சுயநிர்ணயம்' என்ற கருத்தியல் எவ்வாறு கையாளப்பட்டது என்பதைக் கடந்த வாரங்களில் பார்க்க ஆரம்பித்தோம்.

இந்த வகையில் - லெனின் முன்வைத்த சுயநிர்ணயக் கோட்பாடு பற்றியும், அதற்கு எதிரான முதலாளித்துவ சிந்தனை முகாமின் செயற்பாடுகள் பற்றியும், இலங்கையில் இவற்றின் தாக்கங்களால் விளைந்த 'இனத்துவ - அரசியல் முறைமை' பற்றியும் நாம் பார்த்துள்ளோம்.

முதலாளித்துவ தாராளவாத சிந்தனைப் பாரம்பரியத்தில் வந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி வூட்றோ வில்சனுடைய சுயநிர்ணயம் பற்றிய கருத்தியலையும், வூட்றோ வில்சனது கருத்தியல் - எவ்வாறு லெனினது சுயநிர்ணயம் பற்றிய கருத்தியலிருந்து வேறுபட்டது என்பதனையும், இந்த இருவரினதும் கருத்தியல்களும் தத்தமக்கேயுரிய நலன் பேண் நோக்கில் முன்வைக்கப்பட்டனவே தவிர, விளிம்பு நிலைக்கு ஓரங்கட்டப்பட்ட மக்களுக்காக விசுவாசமாக முன்வைக்கப்படவில்லை என்பதனையும் இனிப் பார்க்கலாம்.

லெனினது பார்வைத் தளமானது ஒரு தேசத்தின் பாட்டாளி வர்க்க சமூகம் - அத்தேசிய விடுதலைக்கு ஆற்றும் வகிபாகத்தினை கவனத்தில் கொண்டதாகும்.

அவ் வகிபாகத்தின் மூலம் 'சர்வதேச பாட்டாளிகள் சர்வாதிகாரத்தை' - நிலைநிறுத்தவும் சோசலிச சிந்தனையை ஸ்திரப்படுத்தவும் நோக்கமாகக் கொண்டே 'சுயநிர்ணயத்தை' பற்றி லெனின் சிந்தித்தார்.

சோவியத் தலைவர்கள் அக்காலப்பகுதியில் சிந்தித்த சுயநிர்ணயத்தில் மூன்று விடயங்கள் உள்ளடங்கியிருந்தன.

அவையாவன - சுதந்திரமாகத் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்க வேண்டும் எனக் கருதுகின்ற ஒரு தேசிய இனக்குழுமம், 'சுயநிர்ணயம்' என்பதனைத் தனக்கு வலுச் சேர்க்க இணைத்துக்கொள்ள முடியும்.

அடுத்து - இறைமையுள்ள இரு நாடுகள் தமக்குள் இராணுவ ரீதியாக நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வேளையில் - அதாவது எல்லைப்புற யுத்தங்கள் மற்றும் ஒரு நாட்டின் வரையறுக்கப்பட்ட புவியியல் அரசியல் எல்லைகளுக்குட்பட்ட பிரதேசத்தில் மற்றைய நாடு ஆக்கிரமிக்கும் வண்ணம் - எதிரி நாட்டின் குறித்த பகுதி மக்களை தன்வசமாக்கி சுயநிர்ணயக் கருத்தியலைப் பயன்படுத்தலாம். அதற்கு குறித்த பகுதி மக்கள் தாம் அந்நாட்டுடன் சேர்ந்து வாழத் தலைப்படுகிறோம் என்பதனைச் 'சுயநிர்ணயம்' என்ற அம்சத்தின் மூலம் வெளிப்படுத்த முனையலாம்.

மூன்றாவதாக - காலனித்துவ வாதத்திற்கு எதிரான போராட்டத்தில் அடிமை நாடுகள் அல்லது குடியேற்ற நாடுகள் தங்கள் சுதந்திரத்தை தாங்களே நிர்ணயிப்பதற்கு ஏதுவாக காலனித்துவ விடுதலைக்கான போராட்டத்திற்கு வலுச் சேர்ப்பதாக அமைந்தது.

இந்த வகையில் காலனித்துவ விடுதலை நோக்கில்-சுயநிர்ணயம் பயன்படுத்தப்படும் விதம் பற்றி 1922 இல், அன்றைய சோவியத் வெளிவிவகார அமைச்சர் செச்செரின், லெனினுக்கு எழுதிய கடிதத்தில்-

"உலக யுத்தத்தினால் அடக்குமுறைக்கும் குடியேற்றத்துக்கு உட்பட்டதுமான மக்களின் விடுதலை இயக்கங்கள் தீவிரம் பெற்று வரும் இவ்வேளையில் - எமக்குரிய வெளிவிவகார வேலைத் திட்டமானது அடக்கப்பட்ட எல்லாக் குடியேற்ற நாடுகளது மக்களையும் சர்வதேச நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரவேண்டும் என்பதுடன், எல்லா மக்களது பிரிவினை அல்லது சுயாட்சி உரிமைகளும் அங்கீகரிக்கப்பட வேண்டும்" -என்றார்.

செச்செரின்-அதற்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் மிகவும் கைதேர்ந்தவராக இருந்தார்.

இவ்வாறான சோவியத்தின் நிகழ்ச்சித் திட்டமே சர்வதேச அரங்கில் தனது சுயநல நோக்கில்- சோவியத் ரஷ்சியா சுயநிர்ணயத்தைக் கையாண்டது என்பதற்கு அத்தாட்சியாக அமைந்தது.




சுயநிர்ணயத் தேவையை உணர்த்தும் அகதிகள் கூட்டம்

இவ்வாறான காலனித்துவ விடுதலைப் போராட்டங்களில் பாட்டாளி வர்க்கத்தினரை முதன்மைப்படுத்தி, அவர்களது சுயநிர்ணய உரிமையை முதன்மைப்படுத்த அக்கறையாக இருந்த சோவியத் ரஷ்சியா - எல்லா மக்களதும் சுயநிர்ணயத்தைப் பற்றிப் பேசவில்லை என்பது இங்கு நோக்கத்தக்கதாகும்.

இங்கே முதலில் வைக்கப்பட வேண்டிய வேலைத்திட்டம் - சோசலிசமா? சுயநிர்ணயமா? என்றால் அவர்கள் சோசலிசத்திற்கே முதன்மை கொடுத்தனர்.

மறு முகாமாகிய முதலாளித்துவ ஜனநாயக தாராளவாதச் சிந்தனைப் பள்ளியாகிய - முதலாம் மண்டல நாடுகளில் 'சுயநிர்ணயம்' பற்றி உரக்கச் சிந்தித்தவர் முன்னைய அமெரிக்க ஜனாதிபதி வூட்றோ வில்சன் ஆவார்.

அவர் தனது சிந்தனையில் உள்ளவற்றை தனக்கேயுரித்தான முதலாளித்துவ முகாமிற்கு வலுச் சேர்க்கும் முகமாக - 'சுயநிர்ணயம்' என்பது பொதுமக்கள் கொண்டுள்ள இறைமையின்பாற்பட்டது என்றார். ஒரு அரசாங்கம் என்பது ஆளப்படுவோன் சம்மதத்துடனேயே உருவாவது என்று சுயநிர்ணயத்திற்கான கருத்தியலை-தமது முகாமுக்குரிய அல்லது தமது அணிக்குரிய நல் நோக்கில் முன்வைக்க முயன்றார்.

அதாவது - மக்கள் தமக்குரிய அரசாங்கத்தினை [இங்கு அரசு (State) என்பதற்கு பதிலாக அரசாங்கம் (Government) என்றே சொல்லப்படுவதைக் கூர்ந்து நோக்க வேண்டும்] சுதந்திரமாக தேர்ந்தெடுக்கும் உரிமையை பெற்றிருக்க வேண்டும் என வரையறுக்கின்றார்.

எது எவ்வாறாயினும் - வூட்றோ வில்சனுடைய சுயநிர்ணயக் கோட்பாட்டின்படி, மக்கள் ஒரு வரையறுத்த இறைமைக்குட்பட்ட ஆள்புலப்பகுதியிலிருந்து, இன்னோர் வரையறுத்த இறைமைக்குட்பட்ட ஆள்புலப் பகுதிக்கு பகடைக்காய்களாக மாற்றப்படக்கூடாது என்பதும் -

எவருடைய அரசாங்கத்தின் கீழ் தாம் வாழ விரும்புகின்றோம் என்பதற்கான சமூக ஒப்பந்தத்தினை சுயமாக வரையக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதும் வூட்றோ வில்சன் வலியுறுத்திய சுயநிர்ணயத்தின் முதலிரு அம்சங்களாகும்.

மூன்றாவதாக - சுயநிர்ணய அடிப்படையில் தேசிய எல்லைகள் மாற்றப்படுவது ஆட்சியாளர்களின் நலன்களுக்கு அப்பால் - அதற்கு மேலாக ஆளப்படும் மக்களின் விருப்பங்களுக்கு ஏற்பவே நடைபெற வேண்டும் என்பதனை வூட்றோ வில்சன் வலியுறுத்தினார்.

(வில்சனுடைய இக்கருத்தினை இலங்கைத் தமிழ்ச் சிறுபான்மைத் தேசிய இனம் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய தருணம் இதுவாகும். இன்று புனர்வாழ்வு- அபிவிருத்தி என்ற நோக்கில் வட-கிழக்குப் பகுதி துண்டாடப்படக் கூடியதும், சமூக மற்றும் அரசியல் ஒருமைப்பாட்டைச் சிதைக்கக் கூடியதுமான அபிவிருத்தித் திட்டங்கள் அரசாங்கத் தரப்பிலிருந்து வரையப்படுகின்றனவா என்ற சந்தேகங்கள் நிலவும் இவ்வேளையில், வில்சனுடைய சுயநிர்ணயத்தின் சாராம்சம் மிகவும் எமக்குத் தேவையானதாகும்.)

அடுத்து நான்காவதாக - குடியேற்றவாத நாடுகளுடன் ஒத்துப் போகக் கூடிய விதத்தில் அவற்றில் இருந்து விடுதலை பெறும் நாடுகளின் கோரிக்கைகளுக்குச் சாதகமாகச் சுயநிர்ணய உரிமை செயற்படலாம் என்ற அவரது கருத்தின் சாராம்சம் - மிக முக்கியமாக ஏகாதிபத்தியத்தின் நலன் நோக்கில் முன்வைக்கப்பட்ட கருத்தென்பது வெளிப்படையாகவே தெரியவருகின்றது.

இந்த வகையில் அன்றைய இரு துருவ சர்வதேச அரங்கில் - முதலாளித்துவ முகாம் வலிமையுடையதாகவும், அதேவேளை - நின்று நிலைபெற்றதாகவும் இருந்ததனால் தேசங்களைப் பிரித்து அணி சேர்க்க வேண்டிய தேவை அன்றைய முதலாளித்துவ முகாமிற்கு இருக்கவில்லை.

எனவே - மிகவும் அழுத்தம் குறைந்த வகையில் சுயநிர்ணய உரிமையின் உள்ளகப் பரிமாணத்தை (Internal dimension) கொண்ட ஒரு அரசாங்கத்தினை - அதாவது ஏலவே வரையறுக்கப்பட்ட அரசின் இறைமைக்குள் எவ்வாறான அரசாங்கத்தை அமைப்பது என்ற தொடர்பி லேயே வூட்றோ வில்சன் ஆராய்ந்தார் என்பது இங்கு வெளிப்படையானது. மேலும் - இதற்கு ஜனநாயக ரீதியான சமூக ஒப்பந்தம் இருக்க வேண்டும் எனவும் வூட்றோ வில்சன் எதிர்பார்க்கின்றார்.

ஆனால் - லெனினைப் பொறுத்த வரையில் அன்று ஆரம்பகட்டத்தில் இருந்த சோசலிச முகாமுக்கு சர்வதேச ரீதியாக வலுச்சேர்க்க வேண்டிய தேவை அவருக்கு இருந்தது.

அதனால் - லெனினைப் பொறுத்த வரையில் ஆயுதப் புரட்சியை பயன்படுத்தியாவது சுயநிர்ணயம் பெறப்பட வேண்டும் என்ற கருத்தியலை அவர் கொண்டிருந்தார். இந்த வகையில் சுயநிர்ணயம்- ஒரு புரட்சிகரக் கோட்பாடாக அவருக்கு இருந்தது.

எது எவ்வாறாயினும் - வூட்றோ வில்சனது சுயநிர்ணயம் பற்றிய கருத்தியல்கள் மிகவும் பலவீனமானவை என அவர் சார்ந்த தரப்பினராலேயே விமர்சிக்கப்பட்டன.

வூட்றோ வில்சன் சுயநிர்ணயத்தை பற்றி பேசும்போது அவர் எத்தகைய பின்னணியில் அதனை மனதில் வைத்திருந்தார் என்பது தெளிவாக்கப்படவில்லை. இதனாலேயே வில்சனது சுயநிர்ணயம் உள்ளகப் பரிமாணத்துடன் முடிவுறுவதற்கான மட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தது. அதுமட்டுமல்ல - பிரயோக ரீதியிலும் இக்கருத்தியல் சிக்கலைக் கொண்டிருந்தது.

வில்சனுடைய கோட்பாடு சர்வதேச அரங்கிலுள்ள விடயங்கள் அனைத்தையும் - குறிப்பாக சோசலிச முகாமினது செயற்திட்டங்களை கவனித்துத்தான் முன்வைக்கப்பட்டதா என்ற சந்தேகம் ஆய்வாளர்களிடம் எழுந்தது.

அடுத்து - வில்சன் அமெரிக்க மக்களிற்கு பொருத்தமாக சுயநிர்ணயக் கோட்பாடை முன்வைக்கவில்லை. மாறாக - லெனின் தனது சோவியத் மக்களுக்கும் பொருந்தக் கூடிய விதத்திலேயே சுயநிர்ணயக் கோட்பாட்டை முன்வைத்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

ஆனால் - இன்று ஏக துருவப்பட்ட - அமெரிக்கா தலைமையிலான சர்வதேச அரங்கில், வூட்றோ வில்சனது சுயநிர்ணயக் கோட்பாடு வணிகப் பெரும்பாக அரசுகளின் சந்தை விஸ்தரிப்புக்கு ஏதுவான புறவயச் சூழலைத் தோற்றுவிக்க உதவும் என்பதால் - இன்று 'உலகமயமாத'லானது வூட்றோ வில்சனது சுய நிர்ணயக் கருத்தியலின் பல் பரிணாமங்களை வேண்டி நிற்கின்றது என்றால் அது மிகையல்ல என்றே கூறலாம்.

**வேலும்மயிலும் சேந்தன்**

*(பிரதி செவ்வாய் தொடரும்)*

### கிழக்கில் புலிகளின் தனியாதிக்கத்தைத் தகர்த்திட

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனியான ஆளுநர்கள் வேண்டும்

## சிங்கள மகாஜன பெரமுன கூறுகிறது

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு தனித்தனியான ஆளுநர்களை நியமிக்க வேண்டும் என சிங்கள மகாஜன பெரமுன அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

சிங்கள மகாஜன பெரமுனவின் தலைவர் வண.எல்.ஏ.குணவன்ச தேரர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது -

வடக்கு, கிழக்குப் பகுதிகளை எப்போதுமே இணைக்க முடியாது. அவை பிரிந்தே இருக்க வேண்டும். கிழக்கில் புலிகள் தனியான அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார்கள். இது முறியடிக்கப்பட வேண்டும்.

புலிகள் கிழக்கில் கொண்டிருக்கும் தனியாதிக்கத்தை முறியடிப்பதற்கு வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கென தனித்தனியான ஆளுநர்கள் நியமிக்கப்படவேண்டும்.

அத்துடன் தற்போது அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைமுறையில் இருக்கும் போர்நிறுத்த உடன்பாட்டைக் கண்காணித்துவரும் சர்வதேச கண்காணிப்புக் குழு பக்கச்சார்பாகச் செயற்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

புலிகள் பொதுமக்களைக் கொண்டு முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியபோது அதைக் கட்டுப்படுத்த முன்வராத கண்காணிப்புக்குழு, சிங்கள மக்களை மட்டும் பொறுமையாக இருக்குமாறு கோருவதாகவும் குற்றஞ்சாட்டியதுடன் - நோர்வே அரசாங்கமோ, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவோ இப்பணிக்குத் தகுதியானவையல்ல எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.


ஓவியர் மருது


ஞானரதன்



தமிழ்விழி


ஆரியரத்னவும் மொழிபெயர்ப்பாளரும்


அம்மன்கிளி முருகதாஸ்

# யாழ். மக்கள் சுதந்திர ஒளிக்குப் பதில் மின்சார ஒளியையே கண்டனர்!

## தமிழ்க்கூடலில் செ.விந்தன் சிறப்புரை



(நமது நிருபர்)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 'மானுடத்தின் தமிழ்க்கூடல்-2002' இன் நேற்றைய விழாவில் நடைபெற்ற 3ஆம் நாள் நிகழ்வின் ஆரம்ப அமர்வின்போது கலந்துகொண்ட செ.விந்தன் 'விடுதலைப் போரும் தமிழ் மன வெளிப்பாடும்' என்ற கருப்பொருளில் சிறப்புரையாற்றினார்.

அங்கு அவர் உரையாற்றும் போது - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் சுதந்திர ஒளியைக் காண்பதற்குப் பதிலாக மின்சார ஒளியையே கண்டனர்.

நேற்றுமுன்தினம் வன்னியிலிருந்து வந்த ஒரு பேராளர் தாங்கள் வனவாசம் முடித்து தற்போது வந்திருப்பதாகத் தெரிவித்தார். ஆனால் இராணுவக் கட்டுப்பாட்டில் வாழ்ந்த நாம் அஞ்ஞாதவாசம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த அஞ்ஞாதவாசம் வனவாசத்தை விடக் கொடியது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் விடுவிக்கப்பட்ட பிரதேசம் என பிரசாரப்படுத்தப்படுகிறது. இது உண்மையில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் என்பதை நாம் தெளிவாக உணர்ந்தும் மௌனமாக இருந்திருக்கிறோம்.

கிராமங்களில் 'அறியாமல் கதையாதே' என அடிக்கடிப் பேசுவார்கள். கிராம மக்களுக்குத் தெரிந்த உண்மை, சர்வதேச சமூகத்திற்கும் தென்னிலங்கைச் சமூகத்திற்கும் ஏன் இது தெரியவில்லை? இவர்கள் தமிழரின் போராட்டத்தைப் பற்றி நிறைய விடயங்களை அறியாமலேயே கதைத்திருக்கிறார்கள். அறியாமல் பல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்த நாம் எமது விருப்பம் என்னவென்று தெரியாமல் வாழ்ந்திருக்கிறோம். ஏனெனில் எமது அபிலாஷை எல்லாம் அடிமனதில் புதைந்து போய்விட்டது. மக்களின் மனதில் புதைந்த அவர்களின் விருப்பத்தை அவர்களுக்கு எடுத்துரைத்து அவர்களின் சுயநிர்ணய உரிமை, அவர்களின் அபிலாஷை என்பவற்றை அவர்களுக்குத் தெரியப்படுத்தி இவற்றை 'பொங்கு தமிழ்' என்ற வடிவத்தில் மக்களுக்கும், சர்வதேசத்திற்கும் பல்கலைக்கழக மாணவர்கள் காட்டியுள்ளனர். 'பொங்கு தமிழ்' நிகழ்வு முடிந்து போகும் ஓர் நிகழ்வல்ல. இது தொடர வேண்டும் என செ.விந்தன் தனது சிறப்புரையில் மேலும் தெரிவித்தார்.

# நாட்டார் இலக்கியம், திரைப்படம் நேற்றைய தமிழ்க் கூடலில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் நிதர்சனம் நிறுவனத்துடனும் தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து நடாத்தும் 'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002' என்ற நிகழ்வின் மூன்றாம் நாள் அமர்வுகள் நேற்று நடைபெற்றன.

நேற்றுக்காலை 9மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் மாவீரர் துர்க்காவின் தாயாரான கமலா சுப்பிரமணியம் ஈகச்சுடரை ஏற்றி வைத்தார்.

விழாச்சுடரை தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கமும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் செ.கஜேந்திரனும், பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சொலமன் சிறிலும் ஏற்றி வைத்தனர்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி வரவேற்புரை யாற்றியதைத் தொடர்ந்து செ.விந்தன் 'விடுதலைப் போரும் தமிழ் மன வெளிப்பாடும்' என்ற தொனிப்பொருளில் சிறப்புரையாற்றினார்.

காலை 10மணிக்கு பொது அமர்வு ஆரம்பமாகியது. இந்த அமர்விற்கு அம்மன்கிளி முருகதாஸ் தலைமை தாங்க, கட்டுரையாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் 'விடுதலையை நோக்கிய திசையில் - தமிழ்மொழி' என்ற மையப்பொருளில் உரையாற்றினார்.

கட்டுரையாளர் சோ.கிருஷ்ணராஜா 'இலக்கிய விடுதலையும் 'மானுட விடுதலையும்' என்ற கருப்பொருளில் உரையாற்றினார். கட்டுரையாளர் க.அருந்தாகரன் 'ஈழத்துத் தமிழ் நாட்டார் வழக்கியல் - ஓர் பரிமாண நோக்கு' என்ற கருப்பொருளில் உரையாற்றினார்.

இந்த அமர்வின் இறுதியாக கு. வாசுதேவன், ஆ.கோடீஸ்வரன் ஆகியோர் குறிப்புரையாற்றினார்கள். இந்த அமர்வு மதியம் 12.30மணிக்கு நிறைவு பெற்றதையடுத்து மதியபோசன இடைவேளை வழங்கப்பட்டது.

பின்னர் 'மானுடத்தின் தமிழ்க் கூடல்-2002'இன் 3ஆம் நாள் நிகழ்வின் அடுத்த அமர்வு பிறபகல் 2 மணிக்கு ஆரம்பமானது. இதில் திரைப்பட அமர்வு இடம்பெற்றது. இந்த அமர்வுக்கு ஞானதரன் தலைமை தாங்க பேராசிரியர் சுனில் ஆரியரத்ன 'சிங்கள தமிழ் முரண்பாடுகளின் வெளிப்பாடுகள்' என்ற மையப் பொருளில் உரையாற்றினார்.

கட்டுரையாளர் அ.யேசுராசா 'தமிழ்த் திரைப்படங்களில் ஈழத் தமிழர் போராட்டச் சூழலின் வெளிப்பாடு' என்ற தொனிப்பொருளில் உரையாற்றினார். இந்த அமர்வின் இறுதியில் குறிப்புரைகளை க.சட்டநாதன், விமல் சாமிநாதன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

இவற்றையடுத்து மாலை 3.45 மணியளவில் தமிழீழ கலை பண்பாட்டுக் கழகத்தின் 'வெளிச்சம்' நூலாசிரியர் கருணாகரன் தலைமை தாங்க, 'காற்றுக்கென்ன வேலி' திரைப்பட இயக்குநர் புகழேந்தி தங்கராஜ், புகழ்பெற்ற தமிழக ஓவியர் மருது, புதுவை அனபன், தமிழீழ நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

இவற்றையடுத்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதில் என். எஸ்.மணியத்தின் நெறியாள்கையில் உருவான 'கண்ணகி வழக்குரைத்தல்' என்ற பாரம்பரிய நாட்டுக் கூத்து மேடையேற்றப்பட்டதையடுதது 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' 3ஆம் நாள் நிகழ்வுகள் சிறப்புற நிறைவடைந்தன.

# கடற்றொழிலாளர் கைது தொடர்ந்தால் பெரும் போராட்டம் நடத்தப்படும்!

## வடமராட்சி கடற்றொழிலாளர் கூ.சங்கங்களின் சமாசம் அறிவிப்பு

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறையில் கடந்த செப்ரெம்பர் 2ஆம் திகதி நடைபெற்ற 751 பாதைத் திறப்பு போராட்டத்தினால் ஏற்பட்ட கைதும் அதனைத் தொடர்ந்துவரும் கைதுகளும் தொடருமானால் அனைத்து கடற்றொழிலாளர்களும் ஒன்றிணைந்து மீண்டும் ஒரு போராட்டத்தை மேற்கொள்ளும் கட்டாயத்திற்குத் தள்ளப்படுவார்கள் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது- கடந்த மாதம் 2 ஆம் திகதி நடைபெற்ற - பருத்தித் துறையிலிருந்து வல்வெட்டித்துறையூடாக யாழ்ப்பாணம் செல்லும் பாதைத் திறப்புப் போராட்டத்தின் விளைவாக கடந்த மாதம் 10ஆம் திகதி கொட்டடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த ஆறுமுகம் விக்கினராஜா, இராசதுரை உதயசீலன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு கடந்தமாதம் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். மீண்டும் கடந்த 12ஆம் திகதியன்று பொன்னுச்சாமி ஜெயரட்ணம் என்பவர் கைது செய்யப்பட்டு கடந்த மாதம் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நிலைமை சுமுகமாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மீண்டும் இவ்வகையான கைது மக்கள் மத்தியில் பீதியையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான கைதுகள தொடருமானால் கடற்தொழிலாளர்கள் ஒன்றிணைந்து மீண்டும் ஒருபோராட்டத்தை செய்ய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுவார்கள். எனவே இது விடயத்தில் தாங்கள் அதிக கவனம் கொண்டு மேலும் கைதுகள் இடம்பெறாதவாறும் கைதுசெய்யப்பட்டவரை விடுவிக்க நடவடிக்கை எடுத்து எமது தொழிலாளர்கள் பயமின்றி தொழில் செய்ய ஆவன செய்துதருமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பிரதிகள் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, யாழ்.மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர், வல்வெட்டித்துறை அரசியற்துறை பொறுப்பாளர், மனித உரிமை ஆணைக்குழு-யாழ்ப்பாணம் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது. (17)

# கலை பண்பாட்டுக்கழக வெளியீடுகள்; வாங்குவதில் கலைஞர்கள் ஆர்வம்

(ஊரெழு)

'மானுடததின தமிழககூடல' நிகழவு நடைபெறும வீரசிங்கம மணடபததின முன வாயிலில வைதது விடுதலைபபுலிகளின கலைப பணபாட்டுக கழக வெளியடுகள பொதுமககளுககு விறபனை செயயபபடடு வரபபடுகின்றன.

மேறபடி விறபனை நிலையததில சி.டி. தடடுககள, ஓடியோ கசட்டுககள, சஞசிகைகள எனபன விறபனை செயயபபடடு வருகினறன. இவறறை இநதிய மறறும தெனனிலஙகை இலககிய ஆரவலாகள பொிதும விருமபி வாஙகுவதைக காணககூடியதாக இருநதது. (96)


மானுடத்தின் தமிழ்க் கூடல்
2002
THE TAMIL MEET OF HUMANITY
මානවයාගේ දෙමළ හමුව

மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002

நான்காம் நாள் நிகழ்வுகள்
(22.10.2002)

காலை

9.00-10.30
ஈகச் சுடரேற்றல்
விழாச் சுடரேற்றல்
எஸ்.பீ.சாமி
அமைதி வணக்கம்
வரவேற்புரை
சி.சேரலாதன்
சிறப்புரை
மு.திருநாவுக்கரசு
*சர்வதேச அரசியலும், சிங்கள உயர்குழாமும்*

10.30-12.30 அமர்வு : காண்பியக் கலைகள்
கட்டுரையாளர்கள்
பா.அகிலன்
*கலையும் சிறுபான்மையினரும் ஈழத்தமிழர் காண்பியக்கலைகளின் பகிரனுபவம்*
ப.புஸ்பரட்ணம்
*ஈழததமிழா வரலாறறு மீளகணடு பிடிபபில தொல்பொருட்களும் அவற்றின் பாதுகாப்பும்*
குறிப்புரைஞர்கள்
கோபாலி
சனாதனன்

12.30-1.30 மதிய இடைவேளை

1.30-4.00 அமர்வு - ஊடகம்
தலைமை: வீ.ரீ.தமிழ்மாறன்
கட்டுரையாளர்கள்
ஆ.சிவநேசச்செல்வன்
*தேசியஇன முரண்பாட்டுப் பின்னணியில் தொடர்பு ஊடகப் பண்பாடு*
பா.சிவகுமார்
*ஊடகப்பண்பாடும் இன்றைய உலக மயமாக்கலின் அரசியலும்*
மஞ்சுள வெடிவர்த்தனே
*இன ஒடுக்கு முறையும் சிங்களப் பத்திரிகைகளும*
அமரதாஸ்
*உலகளாவிய ரீதியிலும் ஈழப் போர்க் காலத்திலும் ஒளிப்படக் கலையின் இயங்குநிலை*
குறிப்புரைஞர்கள்
எஸ்.எம்.கோபாலரத்தினம்
சி.ரகுராம்
சிறப்புரை

4.00-4.45 இரா.திருமாவளவன்

4.45-5.45 நிறைவுரை
புதுவை.இரத்தினதுரை

6.00-8.00 கலைநிகழ்ச்சி
மட்டக்களப்பு சீலாமுனை கலைக்கழகம் வழங்கும் 'அருச்சுனன் பெற்ற பாசுபதம்' - வடமோடிக் கூத்து
நெறியாள்கை அண்ணாவியார் யோகன்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மிதிவெடி அகற்றி சரசாலையின் ஒரு பகுதி பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்படும்!

# வாகன இறக்குமதி மோசடி; கடற்படை அதிகாரி தொடர்பு!

(கொழும்பு நிருபர்)

சட்டவிரோதமாக வாகன இறக்குமதியில் ஈடுபட்டதாக கடற்படை உயர் அதிகாரி ஒருவர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். அரசின் அனுமதியுடன் ஒரு உயர் அதிகாரி 35 லட்சம் ரூபா பெறுமதியான வாகனத்தை கொள்வனவு செய்ய முடியும். ஆனால் மேற்படி அதிகாரி 75 லட்சம் ரூபா பெறுமதியான வாகனத்தை கொள்வனவு செய்துள்ளதாக தெரிய வருகிறது. இது தொடர்பான விசாரணைகளை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் உள்ள சரசாலை பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்பட்ட ஒரு பகுதி நிலப்பரப்பு அப்பகுதிப் பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

சரசாலை வடக்கு, சரசாலை தெற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளே இவ்வாறு மிதிவெடி அகற்றும் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள பகுதிகளாகும். இவ்விருபகுதிகளுமே தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இந்த இரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் மீளக் குடியமர்வு வேலைகளை மிதிவெடி அபாயமின்றி மேற்கொள்ள முடியும் என்ற வகையிலேயே மேற்படி நிலப்பரப்பு தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

# தாழமுக்கத்தினால் நாடெங்கும் கடும் மழை

(கொழும்பு நிருபர்)

வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் காரணமாக கடந்த இரு தினங்களாக நாடு பூராகவும் பலத்த மழை பெய்து வருகின்றது. இந்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக கம்பஹா மாவட்ட பிரதேசங்களான வத்தளை, நீர்கொழும்பு, ஜாஎல, கந்தான ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 4500 குடும்பங்கள் தங்கள் இடங்களை விட்டு வெளியேறியுள்ளன. இதே வேளை- வாலவிட்ட, மத்துகம, எல்பாத்த பகுதிகள் எந்நேரமும் வெள்ள அபாயம் தோன்றக்கூடிய சாத்தியங்களை கொண்டுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

# பல்துறைசார் அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பல்துறை சார்ந்த அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

கல்வி, சுகாதாரசேவை, குடிநீர் விநியோகம், மீன்பிடி அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி போன்ற பல்துறை சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவே ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இம்மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள 'நிக்கோட்' செயற்திட்டத்தின் கீழேயே மேற்படி பல்துறை சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

கல்விச் செயற்பாடுகளுக்கு 38.7 மில்லியன் ரூபாவும், சுகாதார சேவைகள் தொடர்பான நடவடிக்கைகளுக்காக 29.42 மில்லியன் ரூபாவும், குடிநீர் விநியோகத்துக்காக 1.2 மில்லியன் ரூபாவும், மீன்பிடித்துறை அபிவிருத்திக்காக 1.2 மில்லியன் ரூபாவும், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 3.99 மில்லியன் ரூபாவும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உதவியாக வழங்கப்படவுள்ளது.

மேற்படி நிதியைப்பயன்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்திட்டங்களின் பிரதிகள் ஏற்கனவே ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது.

பெரும்பாலும் இவ்வாண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியில் மேற்படி செயற்திட்டங்கள் அனைத்தும் செயற்படுத்தப்படவுள்ளன. இத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் யாழ்.செயலகம் மேற்கொண்டு வருகிறது. ஏற்கனவே இதற்கான முன்னேற்பாடுகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க)

# அரசசார்பற்ற நிறுவன செயற்பாடு ஒழுங்கமைக்க செயலகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ்.செயலகம் மேற்கொண்டு வருகிறது. யாழ்.மாவட்டத்தில் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. இவை பல்வேறு வகையான செயற்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றன. சில சமயங்களில் அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமிடையில் ஒருங்கிணைப்பு இல்லாமல் போய்விடுகிறது. இதனால் ஒரு சமச்சீரற்ற வகையிலேயே சில செயற்பாடுகள் தொடர்கின்றன.

இவ்வாறான விடயங்களை கவனத்தில் எடுத்தே அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளும் ஒருங்கிணைந்த வகையில் ஒழுங்கமைக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை யாழ்.செயலகம் மேற்கொண்டு வருகிறது. (க)

# அரச ஊடகங்களின் செயற்பாடு ஆணையாளரின் கட்டுப்பாட்டில்

(கொழும்பு நிருபர்)

கடந்த தேர்தல் காலத்தில் அரசு ஊடக நிறுவனங்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக் காட்சி நிறுவனம் ஆகியன பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு சார்பாக நடந்து கொண்டமை தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த அமைச்சர் கரு ஜெயசூரியாவினால் தொடுக்கப்பட்ட வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

இவ்வழக்குத் தொடர்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜெயவர்த்தனா- எதிர்காலத்தில் தேர்தல்களின் போது மேற்படி நிறுவனங்கள் தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப செயற்படும் என உறுதியளித்தன் பிரகாரம், மேற்படி வழக்கு சமாதானமாக தீர்க்கப்படக்கூடிய சாத்தியங்களைக் கொண்டுள்ளதாக அறியமுடிகின்றது.

# வன்னியிலிருந்து 35 போராளிகள் இன்று மட்டக்களப்பு பயணம்

(கொழும்பு நிருபர்)

வன்னியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் 35 பேர் அடங்கிய குழுவொன்று இன்று யாழ். - கண்டி வீதி ஊடாக மட்டக்களப்புக்குச் செல்லவுள்ளது. இவர்களில் 10 விடுதலைப் புலி உறுப்பினர்கள் யுத்தத்தினால் ஊனமுற்றவர்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இவர்கள் ஓமந்தையிலிருந்து மட்டக்களப்பு வரை இராணுவத்தினரின் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். இதே வேளை வாகரையிலிருந்து முல்லைத்தீவின் சாலைப் பகுதிக்கு கடல் வழியாக 170 போராளிகள் கொண்ட குழுவினரும் இன்று பயணிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க...

மாநாட்டில் கலந்துகொண்டு தாம் சார்ந்த விடயங்கள் தொடர்பாக கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

இதேவேளை- அடுத்தமாதம் 5ஆம் திகதி ஹவாய்த் தீவுகளில் ஆரம்பிக்கப்படவுள்ள அமெரிக்க அரசின் மூலோபாய கற்கைகளுக்கான ஆசிய பசுபிக் நிறுவனத்தின் மாநாட்டில் உரையாற்றவென பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்பத் துறை அமைச்சர் மிலிந்த மொறகொட அழைக்கப்பட்டுள்ளார். ஹவாய்த் தீவிலேயே இலங்கை உட்பட ஆசிய பிராந்தியத்தை கண்காணிக்கும் அமெரிக்காவின் பசுபிக் ராணுவ கட்டளைப் பீடம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## புளொட்..

றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போதே யாழ்.நீதிவான் மேற்கண்ட உத்தரவை பொலிஸாருக்குப் பிறப்பித்தார். பொலிஸாரின் அறிக்கை கிடைப்பதற்கு வசதியாக குறிப்பிட்ட புளொட் உறுப்பினரை நாளை வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் நேற்று முன்தினச் சம்பவத்தில் தப்பியோடிய மற்றுமொரு புளொட் உறுப்பினர் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் மோட்டர் சைக்கிளை அவ்விடத்தில் விட்டு தங்களது முகாமிற்குள் நுழைந்தாக கூறப்படுகின்றது.

வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் விடப்பட்டு இருந்த மோட்டார் சைக்கிளில் தப்பியோடிய புளொட் உறுப்பினர் யார் என்பதனைக் கண்டுபிடிப்பதற்காக பொலிஸார் விசாரணைகளை நடாத்தி வருகின்றனர். (க,உ)

## புலிகளின்...

தாய்லாந்துப் பேச்சுக்கள் போன்ற விடயங்களே ஆராயப்படவுள்ளதாகத் தெரிகிறது.

இன்று வரும் நோர்வேக் குழுவில்- விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், பிரதி அமைச்சரின் உதவியாளர் பிராட்ஸ்கர், ஆலோசகர் கோல்டன், இலங்கைக்கான தூதுவர் வெஸ்ட்பேர்க், நோர்வே தூதரக இரண்டாம் நிலைச் செயலர் ஸ்ராங்லண்ட் ஆகியோரும் இடம்பெறுகின்றனர்.

## நோர்வே...

வலயங்களைத் தளர்த்துதல், கண்ணிவெடிகள் அகற்றுதல் என்பவற்றுடன் - இன்றும் நாளையும் புலிகளுடன் பேசவுள்ள விடயங்களில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதற்கான அம்சங்களும் ஆராயப்பட்டன.

முதலில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்த இச்சந்திப்பு - இரவுப் போசனத்தின் பின் உத்தியோகப்பற்ற ரீதியிலும் நீண்ட நேரம் தொடர்ந்ததாகத் தெரியவருகின்றது. (01)

## குடாநாட்டின்...

குடாநாட்டு மக்களின் அன்றாடப் பிரச்சினை, அகதி முகாம்களில் வாழும மக்களின் இடர்கள், மீன்பிடி, விவசாயம் தொடர்பான பிரச்சினைகள் என்பவை குறித்து அந்த பிரிட்டன் அதிகாரிகளுக்கு விளக்கினார்.

## புதிய...

தும் பதவியில் இருப்பதை விரும்புகின்றார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அரசாங்கம் இந்நியமனங்களை சிபாரிசு செய்ய முடியாதென்றும், அது ஜனாதிபதியின் அதிகாரத்திற்குட்பட்டதென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## எதிர்க்கட்சி...

எடுத்துக் கூறினர்.

அதேவேளை எதிர்க்கட்சித தலைவர் - இரண்டாம் கட்டப் பேச்சுக்களின்போது கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதவாறு பாதுகாத்துக் கொள்ள ஒரு இணக்கப்பட்டை ஏற்படுத்துமாறு நோர்வே குழுவினரை வேண்டிக் கொண்டார்.

## யாழ். சமூகத்தின்...

களை நடத்தியுள்ளோம். ஆனால் இன்று இங்கு பெண்கள் இரவு நேரத்தில் நடமாடமுடியாதுள்ளது. நகை அணியமுடியாதுள்ளது. இச் செயற்பாடுகளுக்கு சில குழுக்களும் ஆதரவளிக்கின்றன. ஆனாலும் இவை போன்ற செயல்களை நாம் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தங்கத்துரை...

போது திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அ.தங்கத்துரை, கல்லூரி அதிபர், கல்வித் திணைக்களப் பொறியியலாளர் உட்பட ஆறுபேர் பலியாகினர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவர்களில் இதுவரை விடுவிக்கப்படாது இருந்த ஜெரோம், நிஜந்தன் ஆகிய இருவரும் கொழும்பு மேல் நீதிமன்றால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். நீதிபதி எரிக் பசநாயக்க இவர்களை விடுதலை செய்தார்.

பொலிஸாரின் குற்ற ஒப்பதல் வாக்குமூலம் பெறப்பட்ட முறை, வாக்குமூலத்தைப் பெற்ற பொலிஸாரின் தகைமை பற்றி சட்டத்தரணிகள் ஆட்சேபித்ததைத் தொடர்ந்து நடைபெற்ற விசராணைகளின்படி இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று விடுதலையான ஜெரோம் அண்மையில் விடுதலைப் புலிகளால விடுவிக்குமாறு வேண்டப்பட்ட போர்க் கைதிகளின் பட்டியலில் இடம் பெற்றிருந்தவர் என்பதும், இவரை விடுவிக்க முடியாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சட்டமா அதிபருக்கு உத்திரவிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

விடுதலையான இருவரும் தாங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த களுத்துறைச் சிறைச்சாலைக்குத் தமது உடமைகளை எடுத்து வருவதற்காக நேற்றுச் சென்றனர்.

முன்னதாக இவ்வழக்கில் முதலாம் எதிரியாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த ஜீவானந்தன் என்பவர் கைது செய்யப்படாத நிலையிலும் ஏனைய சந்தேகநபர்கள் ஐவரும் காலத்திற்குக் காலம் விசாரணையின் பினனரும் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வழக்கு விசாரணையில் முக்கிய பொலிஸ் அதிகாரியாக இருந்த உபைதுல்லா, 2000ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டபோது மூதூரில் வைத்து தற்கொலை படையாளியின் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்பதும் குறிப்பிடத தக்கது.

## நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிகளுக்கான நாணய மாற்று விகிதங்கள் தொடர்பான விபரம் வருமாறு-

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1அமெரிக்க டொலர் | 96.02 | 96.43 |
| 1ஸ்ரேலிங் பவுண் | 149.33 | 149.59 |
| 1யூரோ | 92.95 | 94.00 |
| 1சுவிஸ் பிராங் | 63.13 | 64.08 |
| 1அவுஸ்ரேலிய டொலர் | 52.76 | 53.71 |
| 1ஜப்பானிய யென் | 00.76 | 00.77 |
| 1சவூதி றியால் | 25.69 | 25.69 |

மரண அறிவித்தல்களுக்கு 40 வீத விசேட கழிவு வழங்கப்படும்

நமது ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் மரண அறிவித்தல்களுக்கு - விளம்பரக் கட்டணங்களில் 40 சத வீத விசேட கழிவு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

- பொதுமுகாமையாளர்

இப்பத்திரிகை- இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.